தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை



2022

ஆண்டறிக்கை

நீர் வழங்கல் அமைச்சு

ஆண்டறிக்கை 2022

உள்ளடக்கங்களின் அட்டவணை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

செயலாற்றல் சுடிக்காட்டல்கள்	1
நிதியல்லா சுட்டிக்காட்டல்கள்	2
ஆண்டின் நிகழ்வுகள்	3
எங்களுடைய தத்துவங்கள்	4
கூட்டு ஆளுகை	5
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆபத்துக் குழு	7
பணிப்பாளர்களின் பிரகடனம்	7
நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் செய்தி	8
தலைவர் செய்தி	9
பணிப்பாளர் சபை	10
சிரேஷ்ட முகாமைத்துவம்	14
தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்	20
கூட்டிணைந்த திட்டத்தின் அமுலாக்கல்	21
முதலீடுகளின் தொகுப்பு	21
செயற்பாடுகளின் தொகுப்பு	23
தொழில் முயற்சி ஆபத்து முகாமைத்துவம்	25
நிதிச் செயலாற்றலின் பகுப்பாய்வு	27
செயற்பாட்டுச் செயலாற்றலின் பகுப்பாய்வு	28
கூட்டு ஆளுகை திட்டம்	29
அபிவிருத்தி	29
திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் (நீர் வழங்கல்)	30
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	32

வர்த்தகம்	33
விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்	34
சக்தி முகாமைத்துவம்	34
தகவல் தொழில்நுட்பம்	35
ஆய்வுகூட சேவைகள்	35
நீர் மீளாக்கம் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)	36
சிறிய, நகர, கிராம நீர் மற்றும் துப்புரவேற்பாடு	36
நிலக்கீழ் நீர்	37
வருமானமற்ற நீர் (NRW)	38
GIS மற்றும் படம் வரைதல்	38
மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி	38
நீரிற்கான காணி	39
நிறுவனத் தொடர்பாடல்	40
நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான விசேட நிலையம் (CEWAS)	41
செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்கள்	42
பிராந்திய ஆதார நிலையங்கள்	48
நிலைபேறான மற்றும் அவசரப் பொறுப்பு	56
கணக்காய்வு குழு அறிக்கை	57
நிதிக்கூற்றுக்கள்	60
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	92
சுருக்க வடிவங்கள்	111

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

குடிநீர் வழங்கும் பொறுப்பு ஆரம்பத்தில் பொது வேலைகள் திணைக்களத்தின் (PWD) கீழ் காணப்பட்டதோடு, 1965 ஆம் ஆண்டில் இப்பொறுப்பு நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் சட்டத்தால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நீர் வழங்கல் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது

அறிக்கையின் அறிவித்தல்

கௌரவ நீர் வழங்கல் அமைச்சர்,
நீர் வழங்கல் அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, சுனில் மாவத்தை,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

அன்புடையீர்,

ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் -2022
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் சபை உறுப்பினர்களால் இத்தால் கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இங்ஙணம் உண்மையுள்ள,



நிஷாந்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

செயலாற்றல் சுட்டிக்காட்டல்கள்

நிதி

நிதிச் செயலாற்றல்		2022	2021	YOY மாற்றம் %
வருமானம்	ரூபா'000	**35,464,466**	28,935,445	22.6%
மொத்த இலாபம்	ரூபா'000	**12,319,911**	9,772,499	26.1%
செயற்பாட்டு இலாபம்	ரூபா'000	**-1,153,480**	-3,144,789	-63.3%
வரிக்கு முன்னரான இலாபம்	ரூபா'000	**-3,063,954**	-3,054,327	0.3%
வரிக்கு பின்னரான இலாபம்	ரூபா'000	**-3,097,750**	-3,193,188	-3.0%

நிதி நிலைமை		2022	2021	YOY மாற்றம் %
நடைமுறைச் சொத்துக்கள்	ரூபா'000	**92,673,803**	78,130,456	18.6%
மொத்த சொத்துக்கள்	ரூபா'000	**954,578,772**	784,602,500	21.7%
மொத்தக் கடன்	ரூபா'000	**334,844,033**	239,999,773	39.5%
உரிமை மூலதனம்	ரூபா'000	**529,880,897**	496,863,927	6.6%
கடன் /உரிமை மூலதனம்	%	**63%**	48%	30.8%
கடன் /மொத்த சொத்துக்கள்	%	**35%**	31%	14.7%

தொழிற்படு மூலதன முகாமைத்துவம்		2022	2021	YOY மாற்றம் %
பொருளிருப்பு	நாட்கள்	**226**	198	13.3%
பெறவேண்டியவை	நாட்கள்	**130**	135	-3.4%
நடைமுறைச் சொத்து விகிதம்	நேரம்	**0.67**	1.40	-51.9%
விரைவுச் சொத்து விகிதம்	நேரம்	**0.57**	1.22	-53.5%

இலாபத்தன்மை வீதங்கள்		2022	2021	YOY மாற்றம் %
மொத்த இலாப எல்லை	%	**35%**	34%	2.9%

செயற்பாடு

சேவை மட்ட முன்னேற்றங்கள்		2022	2021	YOY மாற்றம் %
மொத்த குழாய்வழி நீர் வழங்கல் மேவுகை	%	**60.2%**	54.2%	10.25%
i.தே.நீ.வ.வ.ச.	%	**46.8%**	44.6%	4.93%
ii.ச.அ.ச. மற்றும் ஏனையவை	%	**13.4%**	9.6%	39.58%
பாதுகாப்பு நீர் மேவுகைக்கான நுழைவு	%	**95.9%**	94.3%	1.69%
வருமானமற்ற நீர் குறைப்பு	%	**25.24%**	25.82%	2.24%
மொத்த உத்தியோகத்தர்/1,000 இணைப்புகள்		**3.12**	3.38	7.69%
சேகரிப்பு வினைத்திறன்	%	**93%**	108%	-13.88%


நிதியல்லாச் சுட்டிக்காட்டல்கள்


சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

	2021	2022
இருப்பு பெறுமதி (ரூபா)	9,113,022,055	10,718,428,489
இணைப்புகளின் எண்ணிக்கை	2,752,324	2,905,541
இருப்பு வினைத்திறன் ரூபா/இணைப்புகள்	3,311	3,689

வழங்கல்களின் எண்ணிக்கை	2021	2022
உள்நாடு	115	128
வெளிநாடு	29	11

	2021	2022
வழங்கல் கொடுப்பனவுகள் (ரூபா மில்.)	7,230.10	3,516.22







மனித மூலதனம்

ஊழியர்கள்

2021: 9,296 2022: 9,059




ஊழியர் பயிற்சி



	பொறியியல் / தொழிநுட்பம்	முகாமைத்துவம்	கணினி / த.தொ
[illegible]	80	95	25
[illegible]	63	77	44

சபை தரத்தினடிப்படையில் நடாத்தப்பட்ட உள்ளக பயிற்சி



உத்தியோகத்தர் நலன்

விபரங்கள்	2021 இரூபா மில்லியன்	2022 இரூபா மில்லியன்
சம்பளங்கள்	15,168	15,269
ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு	1,177	1,174
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு	294	293
மொத்தம்	16,639	16736

- ஆண்டின் பொது வருடாந்த உற்பத்தி ஊக்குவிப்பாக ரூபா 30,164.00 செலுத்தப்பட்டது.
- முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்காக பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.
- சலுகை வீதங்களில் உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டன.
- சேவையில் உள்ளபோதே இறந்த நிரந்தர ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட இறப்பு நன்கொடைகள்.
- ஊழியர்களிற்கு உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது.
- ஊழியர்களிற்காக ரூபா 650 ஆன மாதாந்த படிகள் வழங்கப்பட்டது.
- ஊழியர்களிற்காக வெளிவாரி நோயாளர் பிரிவினூடாக சிகிச்சை அளிப்பதற்கான கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 833.33 வழங்கப்பட்டது.
- அரசாங்கம் மூலம் கடன் வசதிகள் வழங்கப்பட்டது.
- வங்கிகள் (மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஊடான வீடமைப்பு மற்றும் வாகனக் கடன்கள்).
- பத்துமாதக் கடனிற்கு மோலாதிகமாக NWSDB ஆல் ஒரு வருட கடன் வசதி வழங்கப்பட்டது. (வட்டி வீதம் 4.2%).
- ஊழியர் ஒருவருக்கு ரூபா 10,000 வீதம் பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் சலுகை வீதத்தில் 186 ஊழியர்களிற்காக 12 மாதக் கடனாக ரூபா 83 மில்லியனும் 2,827 ஊழியர்களிற்காக 10 மாதக் கடனாக ரூபா 123 மில்லியனும் வழங்கப்பட்டது.
- ஊழியர்களிற்காக ரூபா 155 மில்லியன் பெறுமதியான மருத்துவ காப்புறுதிக் கொள்கையை அறிமுகப்படுத்தியிருந்ததுடன் அவர்களுடைய மருத்துவச் செலவீனங்களிற்காக ரூபா 130 மில்லியன் கோரப்பட்டிருந்ததுடன் ஆண்டினுள் 18 ஊழியர்களுக்கான இறப்பு இழப்பீடாக ரூபா 20 மில்லியன் கோரப்பட்டது.


ஆண்டின் நிகழ்வுகள்

- நீர் நிபுணத்துவம், வெளிநாட்டு அர்ப்பணிப்பு, கொடையளிக்கும் முகவர்கள் அரசாங்க உத்தியோகபூர்வ ஊடகத் துறை போன்றவற்றிற்கு இணைக்கப்பட்டவர்களிற்கு சர்வதேச நீர் கருத்தரங்கை தொடங்கியதற்காக 2022 திசெம்பர் 14 இல் CEWAS இல் விமர்சையான திறப்பு விழா நடைபெற்றது.
- CEWAS இன் விழா தொடக்கமானது வைபரீதியாக நடைபெற்ற கலை வசதிகள் பகுதியின் குறிப்புரையுடன் கிட்டத்தட்ட உலக தர பயிற்சி மற்றும் கருத்தரங்கு நிலையமாக நடாத்தப்பட்டது.
- விழா தொடக்கமானது கவர்ச்சிகரமாக ஐந்து கலைத்துறை செயலாற்றலுடன் கொண்டாடப்பட்டது.
- ADB,JICA,EU/ACD,உலக வங்கி போன்ற பிரதான ஒத்துழைப்பாளர்களால் நிபுணத்துவ அமர்வு மிகவும் உணர்வுபூர்வமாக இருந்ததுடன் தே.நீ.வ.வ.ச ஒத்துழைப்பு கொடையாளர்களால் செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள் மீது மீளாய்வு வழங்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.














எங்களுடைய தத்துவங்கள்

நோக்கு

"தொழில்நுட்ப மற்றும் சேவைச் சிறப்பின் மூலம் இலங்கையின் அதிஉன்னத பொது வசதிகள் நிறுவனமாக விளங்குதல்"



குறிக்கோள்"



பாவனையாளர்களின் பூரண திருப்தியை உறுதிப்படுத்திக்கொண்டு குடி நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு நலம் பேணலுக்கான நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு சேவை புரிதல்"

இலக்குகள்

- தற்போதுள்ள திட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள செயற்திட்டங்கள் (சேவை மட்டத்திலான முன்னேற்றம் மற்றும் சேவை உள்ளடக்க மேம்பாட்டு தந்திரோபாயம்)
- புதிய செயற்திட்டங்கள் (சேவை உள்ளடக்க மேம்பாடு)
- கடன் சேவை மற்றும் மேலதிக வருமான உருவாக்கங்கள்.
- கட்டணக் கொள்கை மற்றும் வருமான தரமுயர்த்தல்.
- தற்போதுள்ள நிறுவன கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டிற்கான உற்பத்தி மற்றும் வினைத்திறன் முன்னேற்றம்.
- வியாபார வினைத்திறனிற்கான நிறுவன அமைப்பு மீளமைப்பு

கூட்டு ஆளுகை

தே.நீ.வ.வ.சபையினுடைய பலமான மற்றும் விரிவான கூட்டு ஆளுகை கட்டமைப்பு எளிமையான சமூக பொருளாதார மற்றும் சுற்றாடலாக அதே நேரம் தேசிய குறிக்கோள்களை வெளிப்படுத்துபவையாக நிலைபேறாக செல்வதற்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் பொருத்தமான வழியில் வளர்ச்சிக்காக இயலக்கூடிய சுற்றாடலை உருவாக்குவதற்கு முயற்சி செய்கின்றது தே.நீ.வ.வ.ச. இனுடைய கூட்டு ஆளுகை தத்துவம் அதன் சகல பிரிவுகளிற்கும் குறுக்கே நிறுவனமயப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது அதன் தத்துவம் அதன் சகல பங்குதாரர்கள், வெளிவாரி சூழல் மற்றும் நுண்ணிய நிபந்தனைகள் என்பவற்றிற்காகவும் தொடர்ச்சியாக பெறுமதியை உருவாக்கியது.

தே.நீ.வ.வ. சபையினுடைய ஆளுகை கட்டமைப்பு உள்ளக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கூட்டத்தில் அடையப்பட்ட கட்டமைப்புகள் சில சந்தர்ப்பங்களில் விஞ்சிய ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறை தேவையான கட்டாயமான பிரமாணங்களுடன் இணங்குதலை உறுதிப்படுத்துவதற்கு தூண்டுவதற்கு மேலதி-கமாக அதன் சொந்தமாக சரி செய்யப்பட்டது. இந்த கட்டமைப்பு பிரமாணப்படி மீளாய்வு செய்யப்பட்டதுடன் பிரமாணங்கள், சிறந்த நடைமுறை மற்றும் சக்திவாய்ந்த பங்குதாரர் தேவைகள் என்பன வெளிப்படுத்துவதை நாளதுவரையாக்கப்பட்டது. அதேநேரம் கணக்களிப்பு, பங்களிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றின் அதன் அடிப்படை கொள்கைகளை பேணுதல்.

ஆளுகை கட்டமைப்பு

வெளிவாரி பிரமாண இணக்கங்கள்


- 1974 இன் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம் மற்றும் 1992 இல் 13 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (திருத்திய) சட்டம்.
- நிதிச்சட்டம்
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம்
- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்
- திறைசேரி சுற்றறிக்கைகள்
- பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட SOE இற்கான கூட்டு ஆளுகை வழிகாட்டல்.

உள்ளக செயற்கருவி /முயற்சிகள்

- கூட்டிணைந்த திட்டம்
- ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வுக் கொள்கை
- கற்றல் மற்றும் அபிவிருத்தி கொள்கைகள்
- மனத்துயர் கையாளல் கொள்கை
- புகார் கொள்கை
- ஒழுக்காற்று நடாத்துதலின் சட்டத்தொகுப்பு
- வாகனக் கொள்கை
- தொழில்முயற்சி ஆபத்து கொள்கைகள் முகாமைத்துவம்
- உள்ளக சுற்றறிக்கைகள்
- வாடிக்கையாளர் சாசனம்
- விரிவான த.தொ. முறைமை (வர்த்தக, மனித வள, செயற்திட்ட முகாமைத்துவம்

சபை பணிப்பாளர்கள்

தே.நீ.வ.வ.ச. இன் பணிப்பாளர் சபையான நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அவர்களை சட்ட விழுமியங்களால் நியமிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு, ஆபத்துக்குழு மற்றும் சபைக் குழுக்கள் என்பன பணிப்பாளர் சபையால் பிரதிநிதித்துப்படுத்தப்படுகின்றது.



சபையின் பணிகள் மற்றும் பொறுப்புகள்

சகல பணிப்பாளர்களும் அவர்களுக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை ஆற்றும் போது நேர்மையான அறிவை அர்ப்பணிப்பதால் அவர்களுடைய தொழில்திறன், அறிவு, தந்திரோபாய விடயங்களின் சுதந்திரமான தீர்ப்பு, வியாபாரம் நடாத்துவதின் செயலாற்றல் மற்றும் நியமம் என்பனவாக இருக்கின்றன. சுதந்திரமான நிறைவேற்றுத் தரத்திற்கு உட்படாத பணிப்பாளர்களின் பொறுப்பாவது தலைவரினால் மற்றும் ஏனைய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்படும் கீழ் காணப்படும் முன்மொழிவுகள் சம்பந்தமாக தமது சுதந்திரமான தீர்ப்பை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளனர்.

- சபை கூட்டத்திற்கு முன்னர் வாசிக்கப்பட்ட சபை ஆவணங்களுடன் சபை செயற்பாடுகளில் தீவிரமாக பங்குபற்றல்
- நிறுவனத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக நடுத்தர மூலோபாயங்கள் மற்றும் நீண்டகால மூலோபாயங்களை வடிவமைக்கும் போது நிறுவனத்திற்கு உரிய வழிகாட்டல்களை வழங்குதல்.
- நிதி, மனித வளம் மற்றும் கூட்டிணைந்த திட்டங்களை மீளாய்வு செய்து அனுமதித்தல்.
- அதிகார சட்டம் மூலமான அமைப்பின் நோக்கெல்லை மற்றும் ஏற்பாடுகளிற்குள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.
- ஆளுகை மற்றும் இணக்கப்பாடுகளின் கண்காணிப்பு முறைமை.
- அனுமதிக்கப்பட்ட நோக்கெல்லை திட்டத்திற்குள் சகல கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை எடுத்தல்.
- உள்ளக கட்டுப்பாட்டு ஆபத்து முகாமைத்துவத்தின் வெளிநாட்டு முறைமைகள்.
- தந்திரோபாய நெறிப்படுத்தலின் வினைத்திறனான அமுல்படுத்தலை வசதிப்படுத்தகின்ற செயற்பாட்டு தீர்மானங்களை செய்வதில் குறிப்பாக முகாமைத்துவத்திற்கு போதிய அதிகாரம் கையளித்தலை உறுதிப்படுத்தல்.
- அரசியலமைப்பு ஆவணங்களிற்கு ஏதாவது தீர்மானங்கள் அனுமதித்தல்.
- சகல சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் நியதிச்சட்ட உதவிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல்.
- சிறந்த நடைமுறையை பின்பற்றல்

சகல சபை பணிப்பாளர்களும் ஏதாவது அக்கறை/ அக்கறை முரண்பாடு என்பவற்றை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டப்பட்டதுடன் வருடாந்தம் புதிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டன. தீர்மானத்தின் கீழான விடயத்தில் அக்கறையுடைய பணிப்பாளர்கள் அவற்றினை நிறைவேற்றுகின்றனர்.

தலைவரின் பணிகள்

சபை மற்றும் அதன் குழுக்களின் வினைத்திறனான செயற்பாட்டிற்காக தலைமை தாங்கி முகாமை செய்வதே தலைவரின் பிதான பொறுப்பாக உள்ளது. வெளிவாரி அமைப்புக்களின் பிரதி நிதிகள் மற்றும் கூட்டு ஆளுகையின் சகல தோற்றங்கள் மீதும் பங்குதாரர்களிற்கான தொடர்பின் மையப்புள்ளியாக உள்ளார்.

நிதி அறிவாற்றல்

பொது திறைசேரியின் உறுப்பினர் பிரதிநிதி அவர்களுடைய நிதி விடயத்தின் விசேட அறிவாற்றல் ஊடாக முழுமையான நிதி வழிகாட்டலை வழங்கக் கூடியதாக உள்ளது.

சுதந்திரமான தொழில்சார் ஆலோசனை அணுகல்

சபையின் சுதந்திர தன்மை மற்றும் பாதுகாக்கும் நோக்கிலும் சபை எடுக்கும் தீர்மானங்களை வலுப்படுத்துவதற்கும் அவசிய தேவையின் போது சுதந்திர தொழில்சார் ஆலோசனையை நாடிச் செல்லப்படுகின்றது. இதன்படி, சபையானது மீளாய்வாண்டின் போது சுதந்திர தொழில்சார் ஆலோசனை மற்றும் சட்ட, தளபாட, கொள்வனவு மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பகுதிகளிலுள்ள ஆலோசனைகளை பெற்றிருந்தது.

சபைச் செயலாளரின் பணிகள்

- சபை மற்றும் தனிப்பட்ட பணிப்பாளர்கள் அவர்களுடைய பொறுப்புக்களை வெளிப்படுத்துவதை காட்டுவதுடன் நெறிமுறைகள் மற்றும் ஆளுகை விடயங்களில் மத்திய வள வழிநடத்தலை செயற்படுதல்.
- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு உதவுதல்
- நியதிச்சட்ட தேவைப்படுகள் மற்றும் சிறந்த கைத்தொழில் நடைமுறைகள் என்பவற்றுடன் இணங்கி சகல நடை முறைகளும் பின்பற்றப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தல்.
- சிறந்த நடைமுறை பிரமாண மாற்றங்கள் மற்றும் பங்குதாரர் அக்கறை என்பவற்றின் மீளாய்வில் முழு ஆளுகை கட்டமைப்பு மீளாய்வின் ஒழுங்கான மீளாய்வு.
- ஆளுகை சபை கூட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதுடன் முழுச் செயற்பாடுகளின் தாக்கத்தை பொறுப்புடைய விதிகள் மற்றும் பிரமாணங்கள் மீது சபை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலை உறுதிப்படுத்தல்.
- கூட்டத்திற்கு குறைந்தது 5 நாட்களிற்கு முன்னர் BOD இற்கு இடையில் விவாதிக்க வேண்டிய சபைத் பத்திரங்களை சரியாக சுற்றறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்.
- அவசர விடயங்களாக உள்ள போது சுற்றிக்கையிடல் மூலம் சபை தீர்மானம் எதுவும் எடுக்காததை உறுதிப்படுத்தல்.
- கூட்டங்களிற்காக சபைப் பத்திரங்களை விஞ்ஞாபனப்படுத்தல் அல்லது சமர்ப்பித்தல் மீது CEO மற்றும் முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைந்து தலைவர் கூட்ட நிகழ்ச்சி நிரலை வடிவமைத்தல்.
- சபை கூட்டங்களின் திரட்டு மற்றும் வருகைதரல் மற்றும் முறையான வழியில் சபை செயற்பாடுகளின் சரியான கூட்டக் குறிப்பை பேணுதல்.
- சபை உப குழுச் செயலாளராக செயற்படல்
- பங்குதாரருடனான பொதுக் கூட்டங்கள் நடாத்துதல் அல்லது பயன்படக் கூடிய வருடாந்த செயலாற்றல் மீளாய்வு கூட்டம (APRM என்பவற்றிற்கான தேவையான ஒழுங்குகள் செய்தல்
- பணிப்பாளர் அறிக்கையை முன் செப்பனிடலின் போது குறிப்பாக உள்ளக மற்றும் வெளியக ஆலோசகருடனான ஆலோசனையில் முழு AR கணக்குகள் மற்றும் இடைக்கால நிதிக்கூற்றுகள் வெளியிட்டு விநியோகிப்பதை ஒருங்கிணைத்தல்.

சபையானது நிறுவனத்தின் செயற்பாடு மற்றும் ஆளுகை தொடர்பான விடயங்களை விவாதிப்பதற்கு குறைந்த மாத இடைவெளி இல்லாமல் முறையாக செய்கின்றதுடன் சகல சபை பத்திரங்கள மற்றும் குறிப்புகள் தே.நீ.வ.வ.ச. இன் சபை செயலாளரால் ஆவணமயப்படுத்தப்பட்டது. சபையின் சில செயற்பாடுகள் இருக்கின்ற சபை தீர்மான அதிகாரத்துடன் சபை உப குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. உள்ளடக்கங்களின் கீழான விடயங்களின் விரிவான பகுப்பாய்வு மற்றும் விவாதிக்கப்பட்ட விடயங்களை தீர்வு காண்பதற்கான இராஜதந்திர அணுகுமுறை என்பவற்றிறை செயல்படுத்துகின்றது. சபை உறுப்பனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஆழமான பகுப்பாய்வு தேவைப்படும் விடயங்களுக்கு குறிப்பிட்ட துணைக் குழுக்களும் அவ்வப்போது நியமிக்கப்பட்டன. தே.நீ.வ.வ.ச. அதன் சொந்த சபைக் கணக்காய்வுக் குழுவைக் கொண்டுள்ளது, இது 3 நிறைவேற்றுத்தரமற்ற சுயாதீன பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. மற்றும் கணக்காய்வுக் குழுவின் கூட்டக் குறிப்புகள் சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

2022 நிதியாண்டில் வழக்கமான சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரல் கொண்டிருப்பவையாவன,

- குறிப்புகளின் பின்பற்றல்
- குறிப்புகளில் எழுகின்ற விடயங்கள்
- முன்னேற்ற மீளாய்வு
- நெறிமுறை விடயங்கள்
- பாராளுமன்றத்தில் எழுந்த வினாக்கள்
- கொள்கை விடயங்கள் மற்றும் அமைச்சு, திறைசேரி மற்றும் அமைச்சரவை அனுமதி பெறவெண்டிய ஏனைய விடயங்கள்
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் I வினா மற்றும் அறிக்கை
- ஆளணி விடயம்
- ஏனையவை

சபைக் கூட்டங்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களில் பங்குபற்றுதல்

சபையானது ஒவ்வொரு மாதத்திலும் கூடுவதுடன் சபைக் கூட்டத்தை நடத்த வேண்டிய சூழ்நிலையின் போதும் கூடுகின்றது. சபை உறுப்பினர்களின் நடமாட்ட கட்டுப்பாட்டின் போது இணையவழி ஊடாக கூட்டங்களில் இணைந்தனர்.

சபை உறுப்பினர்களின் பெயர்கள்	பதவி	சபை கூட்டம்		கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம்	
		தகுதியுடைய கூட்டங்களின் எண்ணிக்கை	கூட்டத்திற்கு வருகை தந்தோர்	தகுதியுடைய கூட்டங்களின் எண்ணிக்கை	கூட்டத்திற்கு வருகை தந்தோர்
திரு. நிஷாந்த ரணதுங்க	தலைவர்	15	15	-	-
திரு. நிமல் ஆர் ரண்வக	உப தலைவர்	7	7	-	-
திரு W.M.S.B விஜயகோன்	உப தலைவர்	8	7	-	-
பொறி. T.M.R.P.தென்னக்கோன்	சபை உறுப்பினர்	7	4	1	0
பொறி. லக்ஷ்மன் ரணசிங்க	சபை உறுப்பினர்	15	15	6	6
திருமதி. நமணா நாதவிதாரன	சபை உறுப்பினர்	3	3	-	-
திரு.W.M.M.B.வீரசேகர	சபை உறுப்பினர்	6	3	-	-
திருமதி.A.R.விக்கிரமசிங்க	சபை உறுப்பினர்	3	3	2	2
திருமதி. W.E.கொடகம	சபை உறுப்பினர்	12	12	5	5
திருமதி. D.K.விஜயசிங்க	சபை உறுப்பினர்	5	3	1	1
திருமதி. K.A.S.மகேசிகா	சபை உறுப்பினர்	4	4	2	2
திரு.R.A.G.கேமித்த ராஜபக்ஷ	சபை உறுப்பினர்	4	4	-	-
கலாநிதி. V.T.S.K.சிறிவர்த்தன	சபை உறுப்பினர்	15	14	-	-
	அவதானிப்பாளர்கள்				
திரு.H.C.J.திலகரத்ன	மேலதிக செயலாளர் (Tech) M of WS	13	10	-	-
திருமதி. N.M.M.மரிக்கார்	மேலதிக செயலாளர் (Tech) M of WS	1	1	-	-

தே.நீ.வ.வ.ச. ஆபத்துக் குழு

அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளிற்கான (SOE) கூட்டிணைந்த ஆளுகை மீதான வழிகாட்டலின் பிரகாரம், தே.நீ.வ.வ.ச. ஆனது செயற்பாடுகளை நீடிப்பதற்கான இடத்தில் ஆபத்து முகாமைத்துவத்தின் வினைத்திறனான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு 2022 இல் ஆபத்துக் குழுவொன்றை உருவாக்கியது.

தே.நீ.வ.வ.ச. இன் செயற்பாடுகளை பாதிக்கின்ற அளவுகளை வெளிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையை ஆ.கு வசதிப்படுத்த வேண்டியதுடன் எந்தவொரு பாதகமான அளவுகளை குறைப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆ.கு இன் பணிகள் தே.நீ.வ.வ.ச.இன் ஆபத்து அளவை இனங்கண்டு மதிப்பாய்வு செய்வதை உள்ளடக்க வேண்டியதுடன் ஆபத்தை அறிக்கையிடுவதற்கும் முகாமை செய்வதற்குமான தே.நீ.வ.வ.ச. இனுடைய உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை மற்றும், அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல், ஆபத்து முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் ஆபத்தை குறைப்பதற்கு ஆபத்து கணிப்பு பொறிமுறை மற்றும் தந்திரோபாயம் உள்ளடங்கலான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை என்பவற்றிற்காக நிர்ணயித்தல்.

ஆ.கு இன் முதலாவது கூட்டம் 2022/09/01 இல் நடைபெற்றது. விதிமுறை குறிப்புரைகளானது ஆபத்துக் குழுவிற்காக (ஆ.கு) வரையப்பட்டதுடன் கருத்துரைகளிற்காக ஆ.கு உறுப்பினர்களிற்கிடையில் சுழலவிடப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் போது வருகைதந்த ஆபத்துக் குழுக் கூட்டம்

சபை பணிப்பாளரின் பெயர்	பதவி	செப்/01	தகுதியுடைய கூட்டங்களின் எண்.	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
கலாநிதி. V.T.S.K சிறிவர்தன	பணிப்பாளர் சபை உறுப்பினர் ஆபத்துக் குழு கூட்டத்தின் தலைவர்	✓	1	1 / 1
திருமதி. W.E. கொடகம	பணிப்பாளர் சபை உறுப்பினர்	✓	1	1 / 1
பொறி. லக்ஷ்மன் ரனசிங்ஹ	பணிப்பாளர் சபை உறுப்பினர்	✓	1	1 / 1

2022 ஆம் ஆண்டில் 01 ஆபத்துக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

பணிப்பாளர்களின் பிரகடனம்

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பணிப்பாளர்களின் தீர்மானத்திற்கமைய பணிப்பாளர்களினால் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் அவர்கள் வேலைக்கமர்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட 2 ஆண்டு காலப்பகுதியில், நேரடியாக அல்லது மறைமுகமாகவோ அவர்கள் வர்த்தக உறவுமுறையை கொண்டிருக்கவில்லை.

(இ) கடந்த 5 ஆண்டுகளில் பாராளுமன்ற/ மாகாண சபை/ உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உரிய அமைச்சு/ இராஜாங்க அமைச்சர்/ பிரதி அமைச்சர் என்போருக்கு கீழ் வருகின்ற அவர் அல்லது அவள் நெருங்கிய குடும்ப உறவுமுறையாக இருக்கவில்லை.

சபை பணிப்பாளர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

முழுப் பெயர் : நிஷாந்த ரணதுங்க

பதவி : தலைவர்

கையொப்பம் :

திகதி : 2023/01/27

நீர் வழங்கல் அமைச்சு

செயலாளரின் செய்தி



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (NWSDB) சகல நாளாந்த நடவடிக்கைகளும் இயற்கையாகவே நிலையான அபிவிருத்தி இலக்கு 6: "அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதி கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் நிலையான முகாமைத்துவத்தை உறுதி செய்தல்", அதேவேளை இலங்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய மட்ட நடவடிக்கைகளில் தே.நீ.வ.வ.ச. ஆனது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. "அனைவருக்கும் பாதுகாப்பான நீரை வழங்குதல்" என்பதிலிருந்து, நாட்டின் தேசிய கொள்கை கட்டமைப்பான "செழிப்பு மற்றும் சுபீட்சத்தின் தொலைநோக்கு" நிலையான இலக்குகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, நீர் வழங்கல் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கூறிய துணை இலக்குகளுடன் தொடர்புடைய சாதனைகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தேசிய குறிகாட்டிகளை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. (இலக்கு 6.1: உலகளாவிய மற்றும் சமமான அணுகலை கொண்டதாக அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவான குடிநீர் மற்றும் இலக்கு 6.2: அனைவருக்கும் போதுமான மற்றும் சமமான துப்புரவேற்பாட்டு மற்றும் சுத்திகரிப்பிற்கான அணுகலை அடைதல், 2030 இற்குள் திறந்த நிலையில் மலம் கழித்தலை முடிவுறுத்தல், பெண்கள் மற்றும் சிறுமிகளின் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்களின் தேவைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல்).

அமைச்சானது 2022 ஆம் ஆண்டளவில் 60.2% மக்களுக்கு குழாய் நீர் மற்றும் 2.08% மக்களுக்கு குழாய் மூலமான கழிவகற்றல் வசதிகளை கிடைக்கச் செய்வதற்கான இலக்குகளை அடைவதற்கு தே.நீ.வ.வ.ச. உடன் நெருக்கமாக செயல்பட்டு வருகிறது.

நாடானது 2022 மார்ச் மாதத்தில் பொருளாதார சிக்கலில் கடுமையாக பாதிக்கப்பட்ட போது தே.நீ.வ.வ.ச. ஆனது சகல சாத்தியமானவற்றையும் "அனைவருக்கும் நீர்" கிடைப்பதற்கும் ஏற்கனவே செய்திருந்தது. இருப்பினும், நிதி நெருக்கடி காரணமாக எதிர்பார்த்த இலக்கு அடையப்பட்டிருக்காததை அமைச்சு, தே.நீ.வ.வ.ச. மற்றும் சகல பங்குதாரர்கள், நிறுவனம் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் என்போரால் சகல முயற்சிகளும் எடுத்திருந்தன. எவ்வாறாயினும், இந்த பொருளாதார நெருக்கடியிலும், 2022 மார்ச் மாதத்திற்கு பின்னரும் தே.நீ.வ.வ.ச. 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட சாத்தியமானளவு அரசாங்க நிதியளிப்புடன் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை உயர்த்துவதற்காக நிதி அமைச்சின் வழிகாட்டலுடன் செயல்திறனுடன் தந்திரோபாயமாக திட்டமிடலை விருத்திசெய்வதற்கு தொடங்கியிருந்ததுடன் இயலளவு மேம்பாடு மற்றும் விநியோக மேம்பாட்டு செயற்திட்டமாக (CEDE) அமைச்சரவையால் 2022 செப்தெம்பரில் அனுமதிக்கப்பட்டிருந்தது.

மேலும், அமைச்சானது தே.நீ.வ.வ.ச. உடன் அதன் வியாபார வினைத்திறன் அம்சங்களை மேம்படுத்துவதற்கு நெருக்கமாகச் செயல்படுகிறது. நிறுவனத்தின் மறுசீரமைப்புக்கு மேலதிகமாக, வினைத்திறனுடன் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் செலவைக் குறைத்தல், வருமானமற்ற நீரைக் குறைத்தல், வினைத்திறனான கையிருப்பு முகாமைத்துவம் மற்றும் நவீன வேலை நுட்பங்கள் மூலம் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் போன்றவை தற்போது விமர்சன ரீதியாக கவனிக்கப்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டு இறுதியில் 2023 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. இன் செயலாற்றலை கண்காணிப்பதற்காக அமைச்சால் பல பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தின் தேவைப்பட்ட செயலாற்றல் வினைத்திறனை அதிகமாக முன்னேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட இருள் பகுதிகளை ஒளியூட்ட வேண்டிய படிமுறைகள் மற்றும் நிறுவனத்தின் வினைத்திறனான செயலாற்றலை அதிகமாக முன்னேற்றக்கூடிய வழியில் வழிப்படுத்தப்படும்.

அமைச்சானது நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையின் அபிவிருத்தி முயற்சியில் எமக்கு ஆதரவளித்த பல நிதியளிப்பு பங்காளர்களுக்கு நன்றியுணர்வுடன் உள்ளது. நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கொள்கையில் அரசாங்கக் அமுலாக்கலில் அவர்களின் தலைமை மற்றும் வழிகாட்டுதலுக்காக மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். நீர் வழங்கல் கௌரவ இராஜாங்க அமைச்சர் எங்கள் அனைவருக்கும் வழங்கிய வழிகாட்டுதலுக்காக அவர்களுக்கு எனது நன்றிகள். எங்களின் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு தொடர்ந்து ஆதரவளித்த திறைசேரியின் செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் நோய் தொற்று மற்றும் கடினமான பொருளாதார நிலைகளிற்கு இடையில் பொது மக்களிற்கு சேவைகளை வழங்குவதற்காக காட்டப்பட்ட ஆர்வம் மற்றும் முயற்சிகள் தே.நீ.வ.வ.ச. கருத்து தெரிவிப்பதற்கு விரும்பியது.

பொது மக்களுக்கு உயர்தர மற்றும் வினைத்திறனான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைகளை வழங்குவதற்கும், அவர்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு இலக்குகளை அடைவதற்காக 2022 மற்றும் அதற்கும் அப்பால் வரிசைப்படுத்தப்பட்டுள்ள பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்குமான தே.நீ.வ.வ.ச. இன் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.



என்.பீ.மொன்டி ரணதுங்க
செயலாளர்
நீர் வழங்கல் அமைச்சு

தலைவர் செய்தி



ஒரு சிறிய வைரஸினால் உலகம் முழுவதையும் மண்டியிடச் செய்ய முடியும், அதுதான் கோவிட்-19 நமக்கு கற்றுக் கொடுத்த பாடம். பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும் போது நாகரிகமே ஆபத்தில் முடியும். சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாடு ஒரு நாட்டின் ஆரோக்கியத்தில் முக்கியமான கூறுகள். அவை வாழக்கூடிய வாழ்க்கை மற்றும் அர்த்தமுள்ள அபிவிருத்தியின் இன்றியமையாத தூண்களை உருவாக்குகின்றன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இலங்கை மக்களுக்கு சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் தலைவராக நான் இருந்த காலத்தில், 2020 - 2025 இற்கான தே.நீ.வ.வ.ச. இனுடைய கூட்டிணைந்த திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலேயே எனது கவனம் இருந்தது.

எவ்வாறாயினும் 2022ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டின் இறுதியில் பாரியளவில் முகம்கொடுக்க நேர்ந்த பொருளாதார நெருக்கடியின் தாக்கம் மற்றும் அண்மையில் தோற்றம் பெற்ற அரசியல் ஸ்திரமற்ற தன்மை சபையில் அரசியல் நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கான கடினமான உழைப்பினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. எதிர்பாராத சிக்கல் நிலைமையின் எழுச்சி பிரச்சினைகள் பதற்றமான நிலையில் தண்ணீரில் கப்பல் பயணிப்பதை ஒரு சீரான வழியில் செல்ல உறுதி செய்ததுடன் குறைபாட்டிற்கு தீர்வுகாணும் சாத்தியம் கிடைத்திருந்தது. தந்திரோபாய திட்டமிடல் கட்டத்திலுள்ள தே.நீ.வ.வ.ச. ஆல் காட்டப்பட்ட தைரியம் மற்றும் மற்றும் விடாமுயற்சி குறைபாட்டுச் சிக்கல்கள் தொடர்பில் கருத்து தெரிவித்திருந்ததுடன் நான் நாட்டிற்கு இந்த மதிப்புமிக்க சேவையை செய்வதன் மூலம் அங்கு என்னுடைய நியாயமான பங்களிப்பினை வழங்குவதற்கு பெருமைப்படுவதுடன் மகிழ்சியாகவுள்ளேன்.

செயற்பாட்டு காலத்தின் பொது தே.நீ.வ.வ.ச. இற்கு மாத்திரமல்லாமல் 46 % மான சனத்தொகையினருக்கு ரூபா 2.91 மில்லியன் தொகைக்கு மொத்த இணைப்புகளையும் வழங்க இயலக்கூடியதாக இருந்ததுடன், அனுமதி பெறுவதற்கும் முடியுமான இருந்தது. எதிர்காலத்தில் இணைப்பு தன்மையை அதிகரிப்பதற்கு இந்த தளம்பல் நிதி நிலைமையில் இயலக்கூடிய வேலையை 2022 செப்டெம்பரில் 2023 ஆம் ஆண்டிற்காக இயலளவு மேம்பாட்டு விநியோக விரிவாக்கல் (CEDE) செயற்திட்டத்திற்காக சிறிய வேலைத் திட்டத்தை எதிர்பார்க்கப்பட்டது.

நாடு பாதகமான நிலையில் இருந்த போதும் 2022 இல் 1171 குழாய் வழி கழிவகற்றல் இணைப்புகளை வழங்குவதற்கு எமக்கு முடிந்தது. எங்களுடைய கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி 2022 ஆண்டு இறுதியளவில் நாள் ஒன்றிற்கு 113480 கனமீற்றரான மொத்த இயலளவான சுத்திகரிப்பை அடைந்திருந்தது.

WHO வழிகாட்டலின் பிரகாரம் 288 நகர நீர் வழங்கல் திட்டங்களில் நீர் மாதிரிகளை பாதுகாப்பு திட்டங்கள் விருத்திசெய்யப்பட்டது. தே.நீ.வ.வ.ச. அதன் மத்திய ஆய்வுகூடங்கள் மற்றும் பிராந்திய ஆய்வுகூடங்கள் ஊடாக மாதிரிகளை ஒழுங்காக பரிசோதிப்பதை தொடர்ச்சியான மேற்கொண்டதுடன் 2022 இற்காக தரவு பகுப்பாய்வின் பிரகாரம் 98.8 %ஆன நுண்ணுயிரியல் பரிசோதனை திருப்திகரமாக இருந்தது.

சொல்லப்பட்டவாறு "ஒவ்வொன்றும் வெள்ளிமூலாம் பூச்சில் மடிந்தது" இக் கடினமாக சூழ்நிலையின் போது தே.நீ.வ.வ.ச. இற்கு முன்னர் எவ்வித விருப்பமும் ஆழமாக புரிந்துகொள்ள முடிந்த நிறுவனம் அதன் சுயநிலைபேறான தன்மையை அடைவதற்கு அதன் சுதந்திர மற்றும் நேர்மையான வழியில் அதன் சேவையை தொடருவதற்கு ஆழமாக புரிந்து கொண்டிருந்தது.

சுத்திகரிப்பு மற்றும் போக்குவரத்திற்கு ஏற்பட்ட செலவினத்தை கருத்திற்கொண்டு பொதுவான சிக்கன முறையில் நீர் சுத்திகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், நீர் அதிக பெறுமதியுடையதுடன் சேர்க்கக்கூடியதும் மற்றும் வரையறுத்த நோக்கு மற்றும் முன்னோக்கிற்குள் சுத்திகரிக்கப்பட்டது. மனதிலுள்ள உண்மை நிலையை கொண்டுள்ளது. நாங்கள் தற்போதைய சூழலில் நிலவுகின்ற குறைவான சாதகமான நிலைகள் ஊடாக வேலை செய்வதற்கு திறன் மற்றும் உபாயங்களை கொண்டுள்ளோம். அதேநேரம் எங்களுடைய பாதுகாப்பு சுதந்திரமாக உள்ளதுடன் எந்தவொரு நாட்டினரதும் வாழ்க்கைக்கு நீர் பெறுமதியாக உள்ளது.

ஆகவே, அத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ் நாங்கள் தாபனத்தின் சுயதன்மையை தக்கவைப்பதற்காக வினைத்திறனான வியாபாரத்திற்காக இணங்கியுள்ளோம்.

மேலும், உற்பத்தி வழியில் மனிதவள முகாமைத்துவம் மற்றும் பயன்பாடு அத்தியாவசியமாக உள்ளதுடன் இது முறையான செயலாற்றல் மதிப்பாய்வு பொறிமுறை / முறைமை மற்றும் ஊழியர் பங்குபற்றல் அணுகுமுறை ஊடாக அவர்கள் பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

வியாபாரத்தை வினைத்திறனாக முன்னேற்றும் நோக்கில் தே.நீ.வ.வ.ச. கொழும்பில் பெரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுலாக்குவதைப் போல பிராந்திய மட்டங்களில் சிலவற்றை குறுகிய கால மற்றும் நீண்ட காலம் மேற்கொள்வதன் மூலம் வருமானமற்ற நீரை (NRW) குறைப்பதற்கு முயற்சி செய்வதை தொடந்திருந்தது. பின்னர், நாடு முழுவதும் வருமானமற்ற நீர் வீதம் 2022 இன் இறுதியளவில் 25.25 % வீழ்ச்சியைக் கண்டிருந்தது. தே.நீ.வ.வ.ச. 2022 முழுவதும் அதன் வினைத்திறனான முன்னேற்றத்தை கருதுவதாக தகவல் தொழில்நுட்பத்தில் அதன் கவனத்தை தொடர்ந்திருந்தது.

தே.நீ.வ.வ.ச. 2022 திசெம்பர் 14 முதல் 16 வரை "இலங்கையில் 2022 சர்வதேச நீர் கருத்தரங்கு" ஒழுங்கு செய்திருந்ததுடன் நீர் நிபுணத்துவம், வெளிநாட்டு அர்பணிப்பு, அதிகரித்துவரும் ஒழுங்கமைப்புகள், கொடையளிக்கும் முகவர்கள், அரசாங்க அலுவல்கள் ஊடக துறை மற்றும் ஆராய்ச்சி நோக்கு, சிறந்த நடைமுறைகளில் இன்றைய போக்கு, நீர் நிபுணத்துவத்தின் மகத்தான அக்கறையுடைய தொழில்நுட்ப விளிம்பை வெட்டுதல், ஆராய்ச்சியை இளைய தலைமுறையினர் பின்பற்றுதல் மற்றும் அறிவை பகிர்தல் மற்றும் வலையமைப்பிற்காக பல்கலைக்கழக கல்வித்துறை போன்றவற்றுடன் சேர்த்து ஆரம்பத்தில் இலக்கிட்டிருந்தது.

கொழும்பு இரத்மலானையில் அமைந்திருந்த (நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மத்திய நிலையம்) CEWAS பெயருடைய புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உலக தர கருத்தரங்கு நிலையத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. தே.நீ.வ.வ.ச. அறிவாற்றலிற்கான நிலையம், புதுமைக்கான நிலையம் மற்றும் தரத்திற்கான நிலையம் போன்ற அத்தகைய மூன்று பிரதான பிரிவுகளின் பிரயோகிக்கப்பட்ட கற்றல் மற்றும் புதுமை ஊடாக நீர் மற்றும் சுகாதார நிபுணத்துவ அனுபவத்தின் நிபுணத்துவத்தின் களஞ்சியக் காப்பிற்காக செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தே.நீ.வ.வ.ச. ஆனது ஆலோசனை, பயற்சி, பல ஒழுக்காற்று ஆராய்ச்சி, ஆய்வுகூட சேவைகள் மற்றும் மனித உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான அறிவைப் பரப்புதல் போன்ற அத்தகைய தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், உள்ளக கருத்தரங்கு, கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள், சேவையெல்லையை வழங்கல் என்பவற்றை நடாத்துவதற்கு அதன் வசதிகளை பயன்படுத்துகின்றதென நம்புகின்றது. அதேவேளை, மேலதிக வருமான உருவாக்க சந்தர்ப்பமாக CEWAS ஐ பயன்படுத்துவதற்கு திட்டங்களை வைத்திருக்கின்றன.

தே.நீ.வ.வ.ச. புதுப்பிக்கப்பட்ட சர்வதேச, உள்நாட்டு கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு அமைப்புகள் என்பவற்றிற்கு இடையில் பல புரிந்துணர்வு விஞ்ஞாபனங்கள் கைச்சாத்திடப்பட்டன, அத்தகையவாறு, கைத்தொழில் பங்குபற்றல் நிகழ்ச்சித் திட்டம், முதுகலைமானி மற்றும் கலாநிதிக்கான ஒத்துழைப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மற்றும் இயலளவை கட்டியொழுப்புதல் போன்றவற்றை IHE நெதர்லாந்து, சேர்

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் தேசிய இளைஞர் சேவைக் சபை என்பவற்றை 2022 இல் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டன.

2022 ஆம் ஆண்டின் பொது தே.நீ.வ.வ.ச. ஆனது ஊழியர்களுடைய தனிநபர் சுகாதாரம்/ விபத்துக் காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததுடன் இந்த திட்டம் ஊழியர்களுடைய சுகாதார மேவுகைக்காக நிதி உதவியை வழங்குகின்றது. தாபனமானது தவணைப் பணங்களிற்காக சகல செலவினங்களிற்காகவும் ஒழுங்குகளை செய்திருந்தது.

நிறைவேற்ற விவாதங்கள் ஊடாக, தற்போதைய சவால்களிற்காக காலத்திற்கு காலம் தே.நீ.வ.வ.ச. சட்டத்தை திருத்துகின்ற தேவை இனங்காணப்பட்டதுடன் சட்டவரைஞர் திணைக்களத்தின் உதவியுடன் 2022 ஆண்டு இறுதியளவில் சட்ட திருத்த வரைவு தயாரிப்பதற்கு இயலக்கூடியதாக இருந்தது.

மேலும், 2022 இல் தே.நீ.வ.வ.ச. உரிய அரசாங்க அதிகாரிகளை சமாதானப்படுத்தவதற்கு இயலக்கூடியதாக இருந்தது. கட்டண கட்டமைப்பு 2012 இன் பின்னர் பின்தொடர் திருத்தமாக திருத்த வேண்டியிருந்ததுடன் நீர் வழங்கல் அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய சம்பந்தமான நிறுவனங்களால் ஆதரவு வழங்கப்பட்டது. செயற்பாட்டின் போது மிகவும் பாராட்டப்பட்டிருந்தது.

தே.நீ.வ.வ.ச. ஆனது அர்ப்பணிப்புடனும் வினைத்திறனுடனும் உத்தியோகத்தரால் உதவப்பட்டதுடன் சகல இலங்கையர்களிற்கும் சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதியை வழங்குகின்ற எங்களுடைய இறுதி இலக்கினை நெருங்குவதற்காக பெறுவதற்கு 2023ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வலிமைபெறச் செய்யும்.



நிஷாந்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

பணிப்பாளர் சபை



2020 ஜனவரியில் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (தே.நீ.வ.வ.ச.) தவலைவராக செயல்படுகின்றார். தே.நீ.வ.வ.ச.இன் வியாபார முகாமைத்துவமே நோக்காக உள்ளது. 2003 இல் சிட்னி வெஸ்ரேன் பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவத்தில் (MBA) முதுகலைமானி பூர்த்தி செய்திருந்ததுடன் தனியார் துறை, ஊடகம் மற்றும் தொடர்பாடல், பொது நிர்வாகம் மற்றும் பணிப்பாளர் நாயகம் /CEO- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், தலைவர்/CEO மிகின் எயார் (தனியார்) லிமிட்டெட், துணைத் தலைவர் ஏசியன் புறோகுடா யூனியன் நிறுவனம், தலைவர்/ பணிப்பாளர் - தேசிய சுகததாச விளையாட்டு கட்டிடத் தொகுதி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் - மொபிட்டல் (தனியார்) லிமிட்டெட் என்பவற்றில் வியாபார முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலான நிர்வாக அனுபவம்.

திரு. நிஷாந்த ரணதுங்க /தலைவர்
(2020 ஜனவரி மாதத்திலிருந்து இன்றுவரை)



2022 ஜூன் மாதம் சபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். மொனாஸ் பல்கலைக்கழகம் (அவுஸ்திரேலியா) இல் உள்ளூராட்சி நிர்வாக பயிற்சி டிப்ளோமா பூர்த்தி செய்தார் மற்றும் மான்புமிகு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட அமைச்சர் டி.இ.டபிள்யு. குணசேகர ஊவா மற்றும் வடமத்திய ஆளுநராகிய ராஜா கொலுரே ஆகியவர்களில் ஒருங்கிணைப்பு செயலாளராக பணியாற்றியுள்ளார். அத்துடன் விவசாய இராஜாங்க அமைச்சின் சசீந்திர அவர்களின் தனிப்பட்ட செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். "விஸ்வ கலா பவுன்டேஷன்" இன் தலைவர். முன்னாள் உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினர். இதற்கு மேலதிகமாக ஒரே நேரத்தில் தே.நீ.வ.வ.ச. இன் உப தலைவர் பதவிக்கு மேலதிகமாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சின் தனிப்பட்ட செயலாளராகவும் பதவி வகித்தார்.

திரு. டபிள்யூ.எம்.எஸ்.பி.விஜயகோன்/ உப தலைவர் (2022 ஜூனிலிருந்து)



2020 பெப்ரவரியில் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். பட்டய பொறியியலாளர் (IESL(HMIE6172 உறுப்புரிமை இல (HMIE,MIIE,FIAE,(SL)), மற்றும் EC103678 ஆம் பதிவிலக்கம், எந்திரவியல் பொறியியல் ஆலோசகர், பதிவு செய்யப்பட்ட சமதான நீதவான், அரசாங்க அதிகாரமளிக்கப்பட்ட பாதுகாப்பு பரிசோதகர், பொறியியலாளர், ISO 9000/2000 ஆலோசகர், அழிவற்ற பரிசோதகர் (SM), NVQ மட்டம் 5 மற்றும் 6 மதிப்பீட்டாளர் மற்றும் நாடு முழுவதுமான JP. அவர் பல வர்த்தக மற்றும் அரசாங்க நிறுவனங்களில் உதவி பொது முகாமையாளர், சிரேஷ்ட பொறியியலாளர், மற்றும் பொறியியலாளராக இருந்தார். தற்போது ஆலோசனை பொறியியலாளராக செயலாற்றுகின்றார்.

பொறி.ஆர்.ஏ.சரத் லக்ஷ்மன் ரனசிங்க /பணிப்பாளர்
(2020 பெப்ரவரி மாதத்திலிருந்து இன்றுவரை)



2021 மார்ச் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். MBBS(றுஹுணு) இல் பட்டப்பட்டிப்பு, MSc (மருத்துவ நிர்வாகம் - கொழும்பு) 16 ஆண்டுகளாக மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர். அவர் பிரதி பணிப்பாளர் நாயகம், பிராந்திய பணிப்பாளர், சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் சுகாதார துறையில் மருத்துவ உத்தியோகத்தர் போன்ற பதவிகளை வகிக்கின்றார். தற்போது உணவு ஆலோசனை குழுவின் செயலாளர், சுகாதார கோரிக்கைகள், விதிமுறைகள் சம்பந்தமான உப தலைவராவதுடன், தொழில்நுட்ப உணவு ஆலோசனைக் குழுவின், பொது சுகாதார உணவு ஆய்வு கூடங்களின் தலைவருமாவார். அத்துடன் மருத்துவ கல்லூரியின் நிர்வாகிகள் பேரவையின் அங்கத்தவரும் ஆவார்.

கலாநிதி. வீ.ரீ.எஸ்.கே.சிறிவர்த்தன/பணிப்பாளர்
(2021 மார்ச் மாதத்திலிருந்து இன்றுவரை)



2022 மார்ச் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச.இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். முகாமைத்துவ கற்கைகளில் பட்டப்படிப்பு– திறந்த பல்கலைக்கழகம், நிதிப் பொருளாதாரத்தில் முதுமானி–கொழும்பு பல்கலைக்கழகம், பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணைந்த உறுப்பினர் - UK, ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய பட்டய முகாமைத்துவக் கணக்காளராவார். மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர், கொழும்பு பல்கலைக்கழக கணக்காய்வு குழு உறுப்பினர், தற்போது பொது முயற்சிகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உறுப்பினர் - JRDC மீதான இடைக்கால முகாமைத்துவ குழுவின் பட்டகசாலை உறுப்பினராகவும் செயலாற்றுகின்றார்.

திருமதி.வத்சலா எரந்தி கொடகம/பணிப்பாளர்
(2022 மார்ச் மாதத்திலிருந்து இன்றுவரை)



2022 ஒக்டோபர் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். விஞ்ஞான பட்டதாரி, கலை முதுமானி பட்டதாரி, முகாமைத்துவம் சம்பந்தமாக பட்டபின் பட்ட டிப்ளோமா, அபிவிருத்தி கற்கைகளில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, பொது முகாமைத்துவத்தில் டிப்ளோமா, அவர் ஆணையாளர், செயற்திட்ட பணிப்பாளர், சிரேஷ்ட உதவி செயலாளர், பணிப்பாளர், உதவி செயலாளர், உதவி ஆணையாளர் போன்ற பதவிகளில் பணியாற்றியுள்ளார். தற்போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபையின் மேலதிக செயலாளர், இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபையின் சபை உறுப்பினர், இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ சபை உறுப்பினராகவும் உள்ளார்.

திருமதி. மகேசிகா கொடிப்பிலி ஆராச்சி/பணிப்பாளர்
(2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்றுவரை)



2022 ஒக்டோபர் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றுள்ளார். B.Sc.(Mgt)SP, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது முயற்சிகளில் முதுகலைமானிப் படிப்பு, தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா, ஆங்கில மொழியில் டிப்ளோமா (City & Guilds UK) ஆகியவற்றை பூர்த்தி செய்துள்ளார். கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக 10 ஆண்டுகளிற்கு மேல் பணியாற்றிய அனுபவம். விசேட எழுத்து மற்றும் வாய்மொழி தொடர்பாடல் திறனில் வியாபாரக் கற்கை ஆசிரியராக 18 ஆண்டு அனுபவமும் உள்ளது. அவர் கௌரவ சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளராக செயலாற்றியிருந்தார். தற்போது கௌரவ நீர் வழங்கல் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளராக சேவையாற்றுகின்றார்.

திரு. ஆர்.ஏ.கயான் கேமித்த ராஜபக்ஷ/பணிப்பாளர்
(2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்றுவரை)

2022 ஆம் ஆண்டின் முன்னாள் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள்



2020 ஜனவரி மாதத்தில் சபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் தொழில்ரீதியான சட்டத்தரணியாவதுடன், உயர்நீதிமன்ற சட்டத்தரணியும் ஆவார். உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவின் தலைவராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான நடவடிக்கைகள் சம்பந்தமான விரிவான மனிதவள முகாமைத்துவ அனுபவத்தைப் பெற்றுள்ளார். சவூதி அரேபியா இலங்கை தூதரகத்தின் ஊழியர் மற்றும் நலன்புரி ஆலோசகர், நீர் வழங்கல் சபையின் உப தலைவர் பதவிக்கு மேலதிகமாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் பதவியையும் வகித்தார்.

திரு. நிமல் ஆர்.ரணவக்க/உப தலைவர்
(2020 ஜனவரியிலிருந்து 2022 ஜூன் வரை)



2020 ஜனவரி மாதம் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞான மானி பட்டம். -B.Sc.(Mgt)SP, வியாபார நிதி நிர்வாகத்தில் பட்டப்படிப்பு B.Sc.(Admin), நிதி வியாபார நிர்வாகத்தில் முதுமானி (MBA-Fin), அவர் இணைந்த முகாமைத்துவ பட்டயக் கணக்காளர்-(ACMA-UK), அவுஸ்திரேலியா முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் (CGMA- USA), அவுஸ்திரேலியா கணினி சங்கத்தின் உறுப்பினர் ACS). அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் (SOEs) கொள்கை உருவாக்குனராகவும் சில SOEs இல் மேற்பார்வை மற்றும் கண்காணித்தலில் 15 ஆண்டு அனுபவம். அவர் சகல SOE இல் சபை பணிப்பாளராக உள்ளார். நிதியமைச்சிற்கு சொந்தமான தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கீழுள்ள ரோபார்டிக்ஸ் விஞ்ஞான சிறப்பு நிலையம் (தனியார்) நிறுவனத்தின் ப.க. பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

திருமதி. அகலங்கா ரசுஜானி வீக்கிரமசிங்க/பணிப்பாளர்
(2020 ஜனவரி முதல் 2022 மார்ச் வரை)



2020 ஜனவரி மாதம் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்பில் அனுபவமுள்ளவர். செயற்திட்ட நிர்மாண முகாமைத்துவம் மற்றும் கட்டிட நிர்மாணத்தில் ஆலோசகர். அவர் ஆலோசகர், செயற்திட்ட முகாமையாளர், வேலைத்தள முகாமையாளர், வேலைத்தள சிரேஷ்ட பொறியியலாளர், அரச மற்றும் தனியார் துறைக-ளில் வதிவிட பொறியியலாளர். தற்போது நீதிமன்ற திட்டத்தின் பொறியியல் ஆலோசகராக பணியாற்றுகின்றார். இதற்கு நீதியமைச்சின் கட்டம் -2 - உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்ற தொகுதிகள். கட்டம் - 3 நீதியமைச்சு மற்றும் ஹேலீஸ் பென்டன் நிறுவனத்தின் ஆலோசகராக பணியாற்றுகின்றார்.

பொறி. ரீ.எம்.ஆர்.பி.தென்னக்கோன் /பணிப்பாளர்.
(2020 ஜனவரியிலிருந்து 2022 ஜூன் வரை)



2021 திசெம்பர் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தே.நீ.வ.வ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயற்பாட்டு உறுப்பினர். விஞ்ஞான பட்டதாரி-பேராதனை பல்கலைக்கழகம், நிறுவன முகாமைத்துவத்தின் முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்திலுள்ள அதிகாரியாகவும் 30 வருடங்கள் கற்பித்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான அரச சேவை சார்ந்த அனுபவத்துடன் பல்வேறு அமைச்சுக்களின் கீழுள்ள மாகாண நிர்வாக நிறுவனங்களில் பணியாற்றியுள்ளதுடன் பொருளாதாரக் கொள்கையமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திருமதி.டி.கே.விஜயசிங்க/ பணிப்பாளர்
(2021 திசெம்பர் மாதத்திலிருந்து 2022 மே வரை)



2021 செப்டெம்பர் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 1984 இல் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் B.Com பட்டதாரி (விசேட தரம்), 1993 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசாட்சியில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, 2000 இல் SLIDA இல் ஆங்கிலத்தில் டிப்ளோமா, அவர் அரசாங்க ஆசிரியர், தொழில் உத்தியோகத்தர், உதவி பிரதேச செயலாளர், செயலாளர் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், ஆணையாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் போன்ற பதவிகளை வகித்தார். தற்போது உள்ளூராட்சி மற்றும் மகாண சபைகள் அமைச்சில் (2013 ஜூனிலிருந்து இன்றுவரை) மேலதிக செயலாளராகவும் (நிர்வாகம் மற்றும் பயிற்சி) கடமையாற்றியுள்ளார். இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை நிலைபேறான சக்தி அதிகார சபையின் சபை பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

செல்வி நயனா நாதவிதாரண/ பணிப்பாளர்
(2021 செப்டெம்பர் மாதத்திலிருந்து 2022 மார்ச் வரை)



2022 மார்ச் மாதத்தில் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கலைபட்டதாரி–பேராதனை பல்கலைக்கழகம், மனிதவள அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் முதுமானிப்பட்டம் - இந்தியா குருகோப்சிங் பல்கலைக்கழகம், சமூகவியல் முதுமானிப்பட்டம் - களனி பல்கலைக்கழகம், வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா -ரஜரட்ட பல்கலைக்கழகம், சர்வதேச கற்கைகளில் பட்டப்பின்படிப்பு- பண்டாரநாயக்க நிலையம், ஆங்கிலத்தில் டிப்ளோமா- இலங்கை அபிவிருத்தி நிர்வாகநிறுவகம் (SLIDA) விவசாயத்தில் டிப்ளோமா- இலங்கை விவசாய பாடசாலை போன்ற தகைமைகளை கொண்டுள்ளார். அவர் செயலாளர், மேலதிகச் செயலாளர், பதிவாளர் நாயகம், கட்டுப்பாட்டாளர் (வீசா மற்றும் எல்லை முகாமைத்துவம்) பணிப்பாளர், ஆணையாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், உதவி பிரதம செயலாளர், உதவி செயலாளர், முகாமைத்துவ பணிப்பாளர், உதவிச் செயலாளர் மற்றும் பிரதேச உத்தியோகத்தர் போன்றவற்றில் உள்ளார். தற்போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சபையில், விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ளார் அத்துடன், விவசாய நம்பிக்கை பொறுப்பு நிதியம், HARTY, நெல் சந்தைப்படுத்தும் சபை, வடமேல் மாகாண சிரேஷ்ட சிவில் பணியாளர் என்பவற்றின் சபை உறுப்பினர், 2022.09.16 இலிருந்து விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு.டபிள்யூ.எம்.எம்.பீ. வீரசேகர/ பணிப்பாளர்
(2022 மார்ச் மாதத்திலிருந்து 2022 ஆகஸ்ட் வரை)

சிரேஷ்ட முகாமைத்துவம்



2020 ஒக்டோபர் மாதத்தில் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். 1985 இல் விஞ்ஞான பொறியியல் பட்டதாரி - பேராதனை பல்கலைக்கழகம், 2006 இல் பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டத்தில் முதுமானி – கொழும்பு பல்கலைக்கழகம், 2005 இல் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தில் கூட்டு மற்றும் தந்திரோபாய நிதியில் பட்டப்பின்படிப்பு, 2003 இல் வியாபார நிர்வாகத்தின் முதுகலைமானி- கொழும்பு பல்கலைக்கழகம், 1993 இல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் றோயல் தினேஸ் மற்றும் பிறேக் கொபெகென் வர்த்தக கல்லூரி மூலம் நடைபெற்ற செயற்திட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமா, 1991 இல் பட்டய பொறியியலாளர் - (MIE, FIF, இலங்கை பட்டய பொறியியலாளர் நிறுவகம்) 2005 இல் இலங்கை முகாமைத்துவ நிறுவகத்தின் உறுப்பினர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் செயற்திட்ட பொறியியலாளர், DANIDA நிர்மாண செயற்திட்டத்தில் சிரேஷ்ட பொறியியலாளர்/ குழுத் தலைவர், முகாமையாளர் (செயற்பாடுகள்/ ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாடுகள்), பிரதம பொறியியலாளர் (P&D–கழிவகற்றல்/ திட்டமிடல்) உதவி பொது முகாமையாளர் (ஆ.அ.வ.JICA) மற்றும் மேலதிக பொது முகாமையாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) போன்றன.

பொறி. திலிண எஸ். விஜேதுங்க / பொது முகாமையாளர்
(2020 ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்றுவரை)



2019 ஜூன் மாதத்தில் மேலதிக பொது முகாமையாளராக (மேல் மாகாணம்) நியமிக்கப்பட்டார். 1987 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பொறியியல் (சிவில்) பட்டதாரி, விஞ்ஞான பொது முகாமைத்துவத்தில் முதுகலைமானி– SLIDA, பட்டபின்படிப்பு டிப்ளோமா- OSLO. அவர் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் சக உறுப்பினருமாவார். பொறியியலாளர், சிரேஷ்ட பொறியியலாளர், பிரதம பொறியியலாளர், பிராந்திய முகாமையாளர், உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் 32 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

பொறி. சீ.சீ.எச்.எஸ். பெர்னாந்து / மேலதிக பொது முகாமையாளர்
(2019 ஜூன் மாதத்திலிருந்து இன்றுவரை)



2020 ஒக்டோபரில் மேலதிக பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். 1984 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் விஞ்ஞான பட்டதாரி, 1999 இல் ஜப்பான் யோகோகம பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான உட்கட்டமைப்பு முகாமைத்துவத்தில் முதுகலைமானி, 2019 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் சிலில் பொறியியலில் (விசேடமாக நீர் சுத்திகரிப்பில்) கலாநிதிப் பட்டம் (PhD) மற்றும் இலங்கை பொறியியல் நிறுவகத்தில் உறுப்புரிமையை தொடருவதுடன் பொறியியலாளர், வதிவிடப் பொறியியலாளர், சிரேஷ்ட பொறியியலாளர், பிரதம பொறியியலாளர், செயற்திட்ட முகாமையாளர், செயற்திட்ட பணிப்பாளர், பிரதி பொது முகாமையாளர், மேலதிக பொது முகாமையாளர் (கூட்டிணைந்த சேவைகள்) என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் 35 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

கலாநிதி (திருமதி) டபிள்யூ.கே. இலங்கசிங்க / மேலதிக பொது முகாமையாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) (2020 ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்றுவரை)



2020 செப்டெம்பர் மாதத்திலிருந்து மேலதிக பொது முகாமையாளராக (கூட்டிணைந்த சேவை) நியமிக்கப்பட்டார். விஞ்ஞான துறை பொறியியல் (சிவில்) பட்டதாரி- பேராதனை பல்கலைக்கழகம், சுற்றாடல் பொறியியல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுகலைமானி – மொறட்டுவ பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு வியாபார நிர்வாகத்தில் வியாபார நிர்வாக முதுகலைமானி, அல்போக் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான (பொறியியல்) முதுகலைமானி என்பவற்றைக் கொண்டுள்ளார். அவர் IESLஇல் உறுப்பினராக உள்ளதுடன் பெறியியலாளர், வதிவிட பொறியியலாளர், சிரேஷ்ட பொறியியலாளர், முகாமையாளர் (PMAU) செயற்திட்ட பணிப்பாளர் (நீர் வள முகாமைத்துவ செயற்திட்டம் (ADB) / களுகங்கை கழிவுநீர் சுத்திகரிப்பு செயற்திட்டம்), உதவி பொது முகாமையாளர் (NRW), பிரதி பொது முகாமையாளர் (வர்த்தகம்) என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் 31 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

பொறி. எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார்/மேலதிக பொது முகாமையாளராக (கூட்டிணைந்த சேவை)
(2020 செப்டெம்பர் மாதத்திலிருந்து இன்றுவரை)



2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து மேலதிக பொது முகாமையாளராக (வடமத்திய மற்றும் வடக்கு) நியமிக்கப்பட்டார். 1987 ல் விஞ்ஞானதுறை பொறியியல் (சிவில்) பட்டதாரி- பேராதனை பல்கலைக்கழகம், 1998 இல் ஜேர்மனியில் M.Sc (வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல நாடுகளின் நீர் முகாமைத்துவம்) என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் அவர் இலங்கை பொறியியல் நிறுவகத்தில் உறுப்பினராக உள்ளதுடன் செயற்திட்டப் பொறியிய-லாளர், வடிவமைப்புப் பொறியியலாளர், சிரேஷ்ட நிர்மாணப் பொறியியலாளர், செயற்திட்ட முகாமையாளர், முகாமையாளர் (O&M), உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் 32 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

பொறி. எம்.கே.டி.ஜே.எச் மீகொட/ மேலதிக பொது முகாமையாளர் (வடமத்திய மற்றும் வடக்கு) (2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்றுவரை)



2021 செப்டெம்பர் மாதத்திலிருந்து மேலதிக பொது முகாமையாளராக (நீர் வழங்கல் செயற்திட்டங்கள்) நியமிக்கப்பட்டார். 1981 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப டிப்ளோமா, நெதர்லாந்து IHE Delft இல் விஞ்ஞானத் துறையில் நீர் வழங்கல் பொறியியலில் முது-கலைமானி, பொறியியல் துறையில் சுற்றுச்சூழல் பொறியியலில் முதுகலைமானி- மொறட்டுவ பல்கலைக்கழகம், என்பவற்றைக் கொண்டுள்ளார். அவர் இலங்கை பொறியியல் நிறுவகத்தில் உறுப்பினராக உள்ளதுடன் பொறியியல் உதவியாளர், பொறியியலாளர், பிரதம பொறியியலாளர், திட்ட முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், செயற்திட்ட பணிப்பாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் மேலதிக பொது முகாமையாளர் (தெற்கு/ கிழக்கு) என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் 35 ஆண்டுகள் அனுபவமுடையவர்.

பொறி. கே.பீ.ஆர்.எஸ்.சமரசிங்க / மேலதிக பொது முகாமையாளர் (நீர் வழங்கல் செயற்திட்டங்கள்) (2021 செப்டெம்பர் மாதத்திலிருந்து இன்றுவரை)



2021 பெப்ரவரி மாதத்திலிருந்து மேலதிக பொது முகாமையாளராக (தெற்கு/ஊவா/ கிழக்கு) நியமிக்கப்பட்டார். விஞ்ஞானத் துறையில் பொறியியலில் பட்டதாரி, MSc Eng. (நீர் மற்றும் சுற்றுச்சூழல் வள முகாமைத்துவம்), ஹோலன்ட் - UNESCO-IHE) இல் MSc (நீர் வள முகாமைத்துவம்), வியாபார நிர்வாகத்தில் முதுகலைமானி, முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் அவர் IESL மற்றும் இலங்கை முகாமைத்துவ நிறுவகத்தில் உறுப்பினராக உள்ளதுடன் செயற்திட்ட பொறியியலாளர், மாவட்ட முகாமையாளர் (உலகவங்கி, ADB, UNICEF நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்), செயற்திட்ட பணிப்பாளர்/ பிரதம பொறியியலாளர் (KFW காலி மாவட்டம் கட்டம் 2), உதவி பொது முகாமையாளர், செயற்திட்ட பணிப்பாளர் (பதுளை, ஹாலிஎல, எல்ல நீர் வழங்கல் திட்டம் மற்றும் மஹியங்கனை நீர் வழங்கல் திட்டம் மற்றும் பிரதி பொது முகாமையாளர் என்பனவாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் 31 ஆண்டுகள் அனுவபமுடையவர்.

ரூபா 20,000 மில்லியன் பெறுமதியான வடிவமைப்புகளில், "அனைவருக்கும் நீர்" பாதீட்டின் கீழ் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால், நாட்டின் நிதிச் சிக்கல் காரணமாக இது அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. தலைமை வேலை முன்னேற்ற வடிவமைப்பு மற்றும் 06 பிரதான செயற்திட்டங்களின் குழாய் வழங்கல் மற்றும் குழாயிடல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது 03 புதிய செயற்திட்டங்களிற்காக PAC அனுமதி பெறப்பட்டதுடன் வடமேல் மாகாணத்தின் மேவுதலை அதிகரிப்பதற்கு 03 புதிய செயற்திட்டங்களிற்கு சபையின் அனுமதி பெறப்பட்டது.

சப்ரகமுவ

நீர்வாக எல்லை

பிராந்திய ஆதார நிலையமானது (சப்ரகமுவ) பி.ஆ.நி. (சப்ரகமுவ) மற்றும் முகாமையாளர் (இரத்தினபுரி) மற்றும் முழு சப்ரகமுவ மாகாணத்தையும் புவியியல் ரீதியாக மேவுகின்ற முகாமையாளர் (இரத்தினபுரி) மற்றும் முகாமையாளர் (கேகாலை) என்ற பெயருடைய இரண்டு முகாமையாளர் அலுவலகங்களை கொண்டுள்ளது.

நீர் தர மேம்பாடு

நீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மரம் நடுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. எட்டு திட்டங்களிற்களான முறையான உள்ளக கணக்காய்வு பூர்த்தியாக்கப்பட்டதுடன் ஒரு திட்டத்திற்காக முறையான வெளிவாரி கணக்காய்வு பூர்த்தியாக்கப்பட்டது.

வருமானமற்ற நீர் குறைப்பு

2022 ஆம் ஆண்டில் வருமானமற்ற நடவடிக்கைகளிற்காக செலவழித்த ரூபா 18 மில்லியனை குறைப்பதற்கு பி.ஆ.நி. இல் குழாயிடல் உள்ளடங்கலாக வருமானமற்ற நீர் குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பி.ஆ.நி. ஆல் வருமானமற்ற நீர் சதவீதம் 2% ஆல் குறைப்பதற்கு இயலக்கூடியதாக இருந்தது.

வினைத்திறனான இருப்பு நடவடிக்கைகள்

இருப்பு மட்டத்தை குறைப்பதற்கு IMS மாதிரி சகல களஞ்சியங்களிலும் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் ஒன்லைன் வசதியுடன் இணைக்கப்பட்டது. ரூபா 517 மில்லியன் பெறுமதியான வருடாந்த இருப்பு மெய்மையாய்வு பதியப்படுகின்றன.

கூட்டுச் சமூகப் பெறுப்பு

பாடசலைகளிற்கான அடிப்படை நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் 22 பாடசாலைகளுக்கு நீர் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் சகல வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டது.

விசேட கவனத்திற்கான ஏனைய நடவடிக்கைகள்

நீர் வழங்கல் திட்ட குழாய் வலையமைப்பு படம் வரைதல் பிராந்தியங்களில் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டது. நுகர்வோர் புள்ளி படம் வரைதலின் முன்னேற்றம் ஏறத்தாழ 50 % ஆக இருந்தது. நான்கு திட்டங்களிற்காக வலையமைப்பு மாதிரி பகுப்பாய்வு பூர்த்தியாக்கப்பட்டது.

அப்பகுதி வருகைகளிற்கு விசேட குழுவொன்றை நியமித்திருந்ததுடன் சாத்தியமான சிகிச்சையை இனங்காண்பதுடன் இதன்படி நடவடிக்கைகள் எடுத்திருந்தது.

கேகாலையில் மீள்குடியேற்ற செயற்திட்டம் மீள்குடியேற்ற நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் போது மொத்த செலவினம் ரூபா 8.02 மில்லியனாக இருந்தது.

வடக்கு

நிர்வாக எல்லை

பிராந்திய ஆதார நிலையமானது (வடக்கு) பி.ஆ.நி. (வடக்கு) மற்றும் முகாமையாளர் (யாழ்ப்பாணம்) மற்றும் முழு வட மாகாணத்தையும் புவியியல் ரீதியாக மேவுகின்ற முகாமையாளர் (யாழ்ப்பாணம்) மற்றும் முகாமையாளர் (வவுனியா) என்ற பெயருடைய இரண்டு முகாமையாளர் அலுவலகங்களை கொண்டுள்ளது.

விநியோக விரிவாக்கம்

மீளாய்வு காலத்தின் போது 1.06 கி.மீ குழாய் வழி விரிவாக்கல் செய்யப்பட்டது.

நீர் தர மேம்பாடு

இரண்டு பிராந்தி ஆய்வுகூடங்களிலும் இரசாயனம் பரிசோதனைக்காக ISO/ IEC17025:2017இற்கு தரமுயர்த்தப்பட்டு மதிப்பிடப்பட்டது. யாழ்ப்பாண பிராந்திய ஆய்வுகூடம் நுண்ணியல் பரிசோதனைக்காக மதிப்பீட்டை பெற்றிருந்தது. பல்வேறு குடியிருப்பாளர்களிற்கு ஆய்வுகூட சேவைகள் வழங்கியமையால் ரூபா 3.5 மில்லியன் உழைத்திருந்தது. கிளிநொச்சி சுத்திகரிப்பு பொறித்தொகுதி வேலைத்தளத்தில் WaSSIP செயற்திட்டத்தின் நிதியுதவியின் கீழ் ரூபா 3.3 மில்லியன் தொகையிற்காக சிறிய ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டது. பிராந்திய முகாமையாளர் அலுவலகம் யாழ்ப்பாணத்தால் மீளளிக்கக்கூடிய நிதிகள் ஊடாக ரூபா 8.29 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டது. 25 நீர் வழங்கல் திட்டங்களிற்காக நீர் பாதுகாப்பு திட்டம் (WSP) அமுலாக்கப்பட்டது. WaSSIP செயற்திட்டத்தின் உதவியுடன் ரூபா 3.3 மில்லியன் தொகையிற்காக சிறிய ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டது. முருங்கன், கிளிநொச்சி மற்றும் பருத்தித்துறை நீர்வழங்கல் திட்டங்களில் நீர் வழங்கல் திட்டங்களிற்கான வெளிவாரி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் நல்ல புள்ளிகளை பெற்றிருந்தது.

வருமானமற்ற நீர் குறைப்பு

16.19 கி.மீ AC குழாய் வழி மீளமைக்கப்பட்டது, 2 சேகரிக்கின்ற கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன. 400 மி.மீ டயா மொத்த மீற்றர்கள் திருத்தப்பட்டன.

வினைத்திறனான சக்தி நடவடிக்கைகள்

இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் இரூபா 20 மில்லியனிற்காக சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 50 மில்லியன் பெறுமதியில் இயந்திரவியல் மற்றும் மின்னியல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது. இயலளவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 12 கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன. 03 நீர்த்தேக்க கிணறு அபிவிருத்தியின் செயற்பாட்டு பிரச்சினைகளை அதிகரிப்பதற்கு அமுலாக்கப்பட்டது.

உற்பத்தி முன்னேற்ற ஊக்குவிப்புகள்

பிராந்திய முகாமையாளர் அலுவலகம் - வவுனியா 2022 ஆம் ஆண்டின் உலக நீர் தினத்திற்காக சிறந்த முகாமையாளர் அலுவலகத்திற்காக "ஜனாதிபதி விருது" வென்றிருந்தது. பிராந்திய முகாமையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் விசேட பாராட்டிற்கான தேசிய உற்பத்தி செயலக (NPS) விருதுகளை பெற்றிருந்தது. பேராறு அணைக்கட்டுப் பகுதியில் மரம் நடுதல் நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டதுடன் அணைக்கட்டு நடைபாதையும் பூர்த்தியாக்கப்பட்டது.

கழிவு நீர் முகாமைத்துவ நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் துப்புரவேற்பாட்டுப் பிரதான திட்டம் 2021-2030 இன் அமுலாக்கலில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் SMP புத்தகம் வெளியீடு பூர்த்தியாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்காக புதிய கழிவு சேற்றினை சுத்திகரிப்பு தொகுதிகள் (FSTP) 02 இற்கான பரிந்துரை, தற்போதுள்ள கழிவுநீர் சேற்று சுத்திகரிப்பு நிலையத்தின் புனரமைப்பு மற்றும் பன்முகப்படுத்திய கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் (DEWAT) இற்கான பரிந்துரை என்பன நீர் மீளாக்க நடவடிக்கைகளின் கீழ் தொடங்கப்பட்டன.

முறைமை மேம்பாட்டிற்கான திட்டமிடல்

குழாய்கள் குழாயிடல் மற்றும் சிவில் வேலைகளிற்காக ரூபா 2,592 மில்லியன் தொகையான வடிவமைப்பு வேலைகள் WFA செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்டன.

வட மத்திய

நிர்வாக எல்லை

பிராந்திய ஆதார (வட மத்தி) நிலையமானது பி.ஆ.நி. (வட மத்திய) மற்றும் முழு வட மத்திய மாகாணத்தை புவியியல் ரீதியாக மேவுகின்ற முகாமையாளர் (அநுராதபுரம்), முகாமையாளர் (பொலன்னறுவை) என்ற பெயருடைய இரண்டு பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

விநியோக விரிவாக்கம்

WFA நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 110 கி.மீ விநியோகங்கள் பூர்த்தியாக்கப்பட்டது.

நீர் தர மேம்பாடு

நீர் பாதுகாப்பு திட்டங்கள் சகல 33 நீர் வழங்கல் திட்டங்களிலும் வருமானமற்ற நீர் பாதீட்டின் நிதி முன்னேற்றம் 51.0% ஆக இருந்தது.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

பி.ஆ.நி. (வ.ம) இல் தேவைப்பட்ட மதிப்பீட்டு பயிற்சிகளால் 17 வாடிக்கையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்காணப்பட்டதுடன் 13 பயிற்சி பூர்த்தியாக்கப்பட்டது. SHRM முறைமையில் சகல ஊழியர்களின் கோவைகளும் நாளதுவரையாக்கப்பட்டது.

கூட்டுச் சமூக பொறுப்பு

CKD பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கு ரூபா 34.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. உலக வங்கியால் உதவியளிக்கப்பட்ட ST.RWS அமர்வுகளால் நடாத்தப்பட்ட பாடசாலை நீர் வழங்கல் வசதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 47 பாடசாலைகளில் பூர்த்தியாக்கப்பட்டது.

நிலக்கீழ் நீர் புலனாய்வு

30 புலனாய்வுகள், கஹடகஸ்திகிலிய மற்றும் அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டங்களிற்கான மேலதிக நிலக்கீழ் நீர் உள்வாங்கம் நிலையத்தின் நிர்மாணம், 31 நிலக்கீழ் நீர்த்தேக்க கிணறுகளின் விரிவாக்கம், 07 கிணறுகளின் தோண்டல் மற்றும் 66 கைப்பம்பிகளின் திருத்தங்கள் என்பன பிராந்திய நிலக்கீழ் நீர் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.

விசேட கவனத்திற்கான ஏனைய நடவடிக்கைகள்

ரூபா 1,553 மில்லியன் தொகையில் "சகல பாதீட்டிற்குமான நீர்" இற்காக 14 கேள்வி ஆவணங்கள் முன்வைக்கப்பட்டது. கெக்கிராவ, கலாவெவ, துருவில, நுவரவெவ நீர் வழங்கல் திட்டங்களில் தலைமை வேலை முன்னேற்றங்கள் தொடர்புபட்ட வடிவமைப்புகள் மற்றும் வண. சோகித்த நாஹிமி தேரர், கிராமத்திற்காக புதிய நீர் வழங்கல் திட்டத்திற்கான வடிவமைப்பு என்பன பி.ஆ.நி. (வட மத்திய) ஆல் செய்யப்பட்டது. இடைக்கால நீர் வழங்கல் இணைப்புக்களை இனங்காண்பதற்கு சமூக அளவைகள் நடாத்தப்பட்டது. 31 CBO களை கையேற்கப்பட்டதுடன் 31 CBO கள் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் மேவுகின்ற பகுதிக்குள் செயற்பாட்டில் உள்ளன. CRIWM செயற்திட்டத்தின் கீழ் இஹல கல்குலம கிராமிய நீர்வழங்கல் திட்டத்தை RWS பூர்த்தி செய்யவேண்டியுள்ளதுடன் கெலேவ நீர் வழங்கல் திட்ட நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன.

நிலைபேறான மற்றும் அவசர பொறுப்புகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சகல நாளாந்த நடவடிக்கைகளும் இயல்பாகவே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) 6 வது இலக்கான "அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவை கிடைப்பனவு மற்றும் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதி செய்தல்" யதார்த்தமாக ஒருமுகப்படுத்தியிருந்த அதேவேளை இலங்கையினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. தேசிய மட்ட செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டது. மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளிலிருந்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு மாற்றமடைகின்ற வகையில் தே.நீ.வ.வ.ச. ஆனது முன்னாள் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், 2030 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் பாதுகாப்பானதும் மலிவானதுமான குடிநீருக்கான உலகளாவியதும் நியாயமானதுமான அணுகுதலை அடையப்பெறுதல் எனும் இலக்கு 6.1: சகலருக்கும் போதியளவானதும் நியாயமானதுமான சுகாதார மற்றும் சுத்திகரிப்பிற்கான அணுகுதலை அடையப்பெறுதல் எனும் இலக்கு 6.2: மற்றும் திறந்த கழிப்பிடங்களை முடிவுறுத்தல் மற்றும் பெண்கள், சிறுமிகள் மற்றும் ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய நிலையிலுள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் ஆகியவற்றை கண்காணித்தல் மற்றும் அடைவுகள் பற்றி அறிக்கையிடும் பொருட்டான தேசிய குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்வதிலும் இலக்குகளை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தது.

தே.நீ.வ.வ.ச.இன் கூட்டிணைந்த செயல் நடவடிக்கை திட்டமானது குறிப்பிட்ட SDGI நோக்கியதாக சார்ந்திருந்தது. அடிப்படை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் தொடர்பில் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் இந்த விசேட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நோக்குகள் மற்றும் இலக்குகள் இறுதியாக்கப்பட்டதுடன் 2019 யூனில் பங்குதாரர்களால் செல்லுபடியாக்கப்பட்டது. தே.நீ.வ.வ.ச. ஆனது அவற்றின் குறித்த இலக்கினை அடைவதற்கு எதிர்கால செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாதீடுகளிற்கு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கின்றது.

2019 ஆம் ஆண்டின் போது தே.நீ.வ.வ.ச. ஆனது இந்த நோக்கத்திற்கான தரவு சேகரிப்பதற்காக வினாத்தள்களின் அபிவிருத்தி தொடர்பில் மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் பல கலந்துரையாடல்களை நடாத்தியது.

2022 ஆம் ஆண்டில் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பிலான நிலைபேறான தன்மை மற்றும் அவசரநிலை பொறுப்புகளில் முனைப்புடன் ஈடுபடுவதை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டதோடு, அரசாங்க நிறுவனங்களின் மூலம் பின்வரும் விபரங்கள் கொண்டிருந்த நடத்தப்பட்ட பல செயலமர்வுகளுக்கும் பங்களிப்புச் செய்தது.

1. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வுக்கான தேசிய பல்துறை பங்குதாரர் ஆலோசனைச் செயலமர்வு - 2018.04.24 இல் இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடம்.

2. SDG – 6 கண்காணிப்பு – பங்குதாரர் ஆலோசனைச் செயலமர்வு – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு – 2018.04.26 இல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர்கூடம்.

3. தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படவுள்ள குடும்ப மதிப்பீட்டுக்காக தேவைப்பட்ட நீர் தரப் பரிசோதனை - SDG 6 இலக்கு 6.1 - 2018.10.23 இல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்.

4. SDG 6 குறிகாட்டிக் குழுக் கூட்டம் - 2018.08.17 இல் நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு கேட்போர்கூடம்.

5. பிரதான பங்குதார்களுடன் SDG இற்கான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறை வலுப்படுத்தல் கூட்டம் - 2018.03.28 இல் முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு.

6. SDG 6.1 மற்றும் 6.2 இலக்குகளை அடைவதற்கு பாதுகாப்பாக முகாமை செய்யப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைகளில் உலகளாவிய கண்காணிப்பு முறைமை பற்றிய WHO மற்றும் UNICEF இன் இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட இணையத்தின் ஊடான கருத்தரங்கு - 2019.05.28 இல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கேட்போர்கூடம்.

7. SDG 6 இலக்குகள் - நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைகளில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தேசிய இலக்குகளை அமைத்தல் - 2019.06.26 இல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

8. SDG–6 குறிகாட்டல் - தொடர்பில் WHO/UNICEF இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்ட உதவியுடனான செயலமர்வு –2019.07.23 இல் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல்.

9. நிலைபேறான அபிவிருத்தி மீது அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான பொதுசன சேவை விநியோக SDG பிரதான போக்கினைத் தயாரித்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பிலான ஆலோசனை மற்றும் மூலோபயங்கள் செயமர்வு - 2019.09.20 இல் மூவென்பிக் ஹோட்டல்.

10. இணைந்த மேற்பார்வை நிகழ்ச்சித்திட்ட (JMP) அறிக்கை 2020 – 2021 தொடர்பிலான மீளாய்வுக் கூட்டம் - 2020.03.05 இல் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கேட்போர் கூடம்.

11. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்துக்கான (NPSSD) செல்லுபடியாக்கல் செயலமர்வு - 2020.03.12 - 2021.03.14 வரை JAIC கில்டன் ஜெற்விங் GS. ,

12. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான வரைவு தேசிய கொள்கை மற்றும் மூலோபாயம் (NPSSD) தொடர்பிலான மீளாய்வு –2020.06.22 இல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடம்.

13. பிரதான ஓட்டத்தில் தரவு இயலளவை கட்டியொழுப்புதல் செயலமர்வு - 2021.03.19 இல் நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர்கூடம்.

14. 2021.03.19 ஆம் திகதி நடைபெற்ற செயலமர்வில் வேண்டப்பட்ட தரவுகளை சமர்ப்பித்தல்.

15. 2021.08.17 இல் நீர் துறைக்கான SDG குறிகாட்டிகள் தொடர்பான தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கான தரவு சமர்ப்பித்தல்.

16. பிரதான ஓட்டத்தில் தொழில்நுட்ப அமர்வு மற்றும் தரவு திறனை கட்டியெழுப்புதல் மீதான செயலமர்வு – 2021.09.05 இல் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல்.

17. 2022.03.03 இல் கொழும்பு 05, ஜானகி ஹோட்டல் இலங்கை "2022 SDG இன் தன்னார்வ தேசிய மீளாய்வு" செயலமர்வு.

18. பொருளாதார அறிவுத்திறன் பிரிவால் ஒருங்கிணைந்த ஆராய்சியால் நடாத்தப்பட்ட "இலங்கை SDG முதலீட்டாளர் பரப்பின் அபிவிருத்தி: மீது நடைபெற்ற கருத்தரங்கு கூட்டம், 2022.03.15 இல் இலங்கை வர்த்தக சங்கம்.

19. 2022 ஏப்ரல் 27 முதல் 29 வரை SDG இன் அமுலாக்கலில் இரண்டாவது தன்னார்வ தேசிய மீளாய்வின் (VNR) தகுதி மீது நிகரான அமர்வு.

20. 2022.07.07 இல் "தேசிய SDG தரவு பகுதியின் SDG தரவு முகாமைத்துவ முறைமை" (Virtual) மீதான அறிவு பகிர்தல் அமர்வு.

21. 2022.07.19 இல் "SDG 6 குறிகாட்டிகளின் முறை ரீதியான அபிவிருத்தி" மீதான மெய்நிகர் அமர்வு.

22. 2022.09.22 இல் "SDG முன்னேற்ற மதிப்பீடு மீதான இலக்குப் பரீட்சை" மீதான (Virtual) அறிவுப்பகிர்வு அமர்வு.

23. 2022.10.06 இல் நீர் வழங்கல் அமைச்சு மண்டபத்தில் நீர் வழங்கல் அமைச்சின் கீழான சகல நிறுவனங்களும் SDG அமுலாக்கல் மீதான ஆரம்ப கலந்துரையாடல்.

24. 2022.10.07 இல் அபிவிருத்தி முறை மற்றும் தரவு தொகுப்பிற்கான (Virtual) எதிர்வுகூறல் குழு கலந்துரையால்.

25. 2022.12.01 இல் நீர் வழங்கல் அமைச்சு மண்டபத்தில் "SDG 06 இன் பங்குதாரர் வரைபடம்" மீதான செயலமர்வு.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் செயல் நடவடிக்கை திட்டத்திற்காக வைத்திருக்கின்றது. தே.நீ.வ.வ.ச. ஆனது 2018 இல் "அவசர பொறுப்புத் திட்டத்தை" அபிவிருத்தி செய்திருந்தது. வாடிக்கையாளர் மற்றும் பெருமளவு பொது மக்களிற்கு நீர் வழங்கும் போது இடையூறுகளை குறைக்கும் நோக்கில் மற்றும் அவசர தேவையின் போது பொது மக்கள் சுகாதார பாதுகாப்பு வழங்குவதற்கு அவசர பொறுப்பு திட்டமானது செயற்பாடு மற்றும் நிர்வாக வழிகாட்டல்களை போல நீர் வழங்கல் முறைமைகளில் ஏற்படக்கூடிய பல்வேறு அவசர நிலைமைகளை தெரியப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டது. தே.நீ.வ.வ.ச. ஆனது 2022 இல் இந்த அவசர பொறுப்பு திட்டத்தை நாளதுவரையாக்கியிருந்தது. புதிய அபிவிருத்தி தொடர்பானவற்றை கருத்திற்கொண்டு 2022 இல் குடிநீர் கொள்கை மீளாய்வும் தொடர்ந்திருந்தது.

கணக்காய்வு குழு அறிக்கை

"கணக்காய்வு குழுவின் (க.கு) ஒவ்வொரு சிபாரிசுகளும் சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்ததுடன் சில விடயங்கள் சபைக் கூட்டங்களில் மேலும் விவாதிக்கப்பட்டன".

குழுவின் தொகுப்பு

2022 ஆம் ஆண்டில், கணக்காய்வு குழு பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருந்தது.

நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள்

1. திருமதி. ஏ. ஆர். விக்ரமசிங்ஹ – கணக்காய்வு குழுவின் தலைவர் / சபை உறுப்பினர் (2022 / மார்ச் வரை)
2. செல்வி. டபிள்யூ.ஈ. கொடகம – கணக்காய்வு குழுவின் தலைவர் / சபை உறுப்பினர் (2022 / மார்ச் வரை)
3. பொறி. டீ.எம்.ஆர்.பி. தென்னக்கோன் – சபை உறுப்பினர் 2022 / பெப்ரவரி வரை)
4. பொறி. லக்ஷ்மன் ரனசிங்ஹ – சபை உறுப்பினர் 2022 / பெப்ரவரி வரை)
5. திருமதி. தமயந்தி கே. விஜேசிங்ஹ – சபை உறுப்பினர் 2022 / மே வரை)
6. செல்வி. கே.ஏ.எஸ். மஹேசிகா – சபை உறுப்பினர் 2022 / ஒக்டோபரிலிருந்து)

அவதானிப்பாளர்கள்

7. திரு. டி.என். பிரிஸ் – அரசாங்க கணக்காய்வின் கணக்காய்வு அத்தியட்சகர்
8. செல்வி. கே.ஏ.ஜீ. துசாரி – பிரதம உள்ளக கணக்காய்வாளர், நீர் வழங்கல் அமைச்சு

மாற்றீட்டாளர்

9. திரு. யூ.ஜே. சமரசிங்ஹ– பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)

அழைப்பின் பேரில் வழைமையாக சமூகமளிக்கின்றவர்கள்

10. திரு. நிமல் ஆர். ரணவக - உப தலைவர்/ சபை உறுப்பினர் 2022/ ஜுன் வரை)
11. திரு. டபிள்யூ.எம்.எஸ்.பீ..விஜேகோன் - உப தலைவர் / சபை உறுப்பினர் 2022/ ஜுனிலிருந்து)
12. திரு. டீ. எஸ். விஜேதுங்க – பொது முகாமையாளர்
13. திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன– மேலதிக பொ.மு. (நிதி)
14. திரு. ஜீ.கே. இத்தமல்கொட - மேலதிக பொ.மு. (ம.வ.மு)
15. திருமதி. என். வய். எஸ். அபேகுணவர்தன - மேலதிக பொ.மு. (ம.வ.மு)/ பி.பொ.மு. (தொ.உ)
16. திரு. எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் - மேலதிக பொ.து.மு. (CS)
17. திருமதி. ஐ.எம்.டபிள்யூ.கே. இலங்கசிங்ஹ - மேலதிக பொ.மு. (கொ.தி)
18. திரு. கே.பி.ஆர்.எஸ். சமரசிங்ஹ - மேலதிக பொ.மு. (நீ.வ.செ.)
19. திரு. ஐ.வீ.டபிள்யூ. எதிரிவீர மேலதிக பொ.மு. (நீ.வ)
20. திரு. சீ.சீ.எச்.எஸ். பரனாந்து - மேலதிக பொ.மு (மேல்)
21. திரு. ஜீ.வீ.ஆர். விஜேரத்ன - மேலதிக பொ.மு. (ம/சப/வ.மே)
22 திரு. ருவான் லியனகே - மேலதிக பொ.மு. (தெ/ஊ/கி)
23 திரு. ஜே.எச். மீகொட - மேலதிக பொ.மு. (வ/வம)
24. திரு. எஸ்.ஏ. ரசீட் - மேலதிக பொ.மு. (ஊ.யு.ஆ)

குழுவின் செயலாளர்

25. செல்வி. டப்ளியூ. பீ. சதமாலி டி சில்வா – பணிப்பாளர் சபையின் செயலாளர்

பெயர்	பங்குபற்றுவதற்கான தகைமை/ பங்குபற்றியோர்
திருமதி. A.R. விக்ரமசிங்ஹ	02 / 02
செல்வி. W. E. கொடகம	05 / 05
பொறி. T.M.R.P. தென்னக்கோன்	01 / 00
பொறி. லக்ஷ்மன் ரனசிங்ஹ	06 / 06
திருமதி. தமயந்தி K. விஜேசிங்கே	01 / 01
செல்வி. K.A.S. மஹேசிகா	02 / 02

கணக்கய்வு குழுவானது இல. 590 ஆம் இலக்க சபை கூட்டத்தின் 296(ஆ) ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சபை பணிப்பாளர் சபையின் ஒத்துழைப்பை பெற்று 1999 நவம்பர் 19 ஆந் திகதிய PF/PE/3 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் உருவாக்கப்பட்டது. குழுவின் நோக்கம் 2021.11.16 ஆந் திகதிய PED 01/2021 ஆம் இலக்க வழிகாட்டல் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு அதன் உதவியை விரிவாக்குவதாக உள்ளது.

பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

குறிப்பிடப்பட்டவாறு குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு இருந்தன.

- கணக்காய்வு குழுவானது வருடாந்த கணக்காய்வு திட்டம் மற்றும் திட்டத்திற்கான சகல பிரதான மாற்றங்களை அனுமதிக்கப்பட்டுள்ளது.
- கணக்காய்வு குழுவானது உள்ளக கணக்காய்வாளர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களுடைய வினைத்திறன்களை தொடருவதை மீளாய்வு செய்வதற்கு வேண்டப்பட்டது.
- கணக்காய்வு குழுவானது சம்பந்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொருத்தமான சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கி நிதி அறிக்கைகள் செய்யப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு மேற்பார்வையிடும் பணியில் சபைக்கு உதவி செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது சகல விதிகள் மற்றும் பிரமாணங்கள், மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கைகள் பின்பற்றப்படுவதை கண்காணித்து சபைக்கு சிபாரிசு செய்வதை தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதும் கண்காணிப்பது என்பதை உறுதிப்படுத்தி சபைக்கு உதவி செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது திருத்தும் நடவடிக்கைகளை செய்வதற்கு உள்ளக / வெளியக கணக்காய்வு, முகாமைத்துவ கடிதங்கள் மற்றும் இன் சிபாரிசுகள் மற்றும் சபைக்கு உதவி செய்வதற்கும் மீளாய்வு செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்தி அமுலாக்குவதற்கும் கூட்டு ஆளுகை நடைமுறையின் உயர்ந்த தரத்தினை கடைப்பிடிப்பதற்கு சபைக்கு உதவி செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது கட்டிட தொகுதி அல்லது வழமையற்ற கொடுக்கல் வாங்கல்கள், உயர்வான தீர்ப்பு பகுதி உள்ளடங்கலாக முக்கியமான கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் விடயங்கள் மற்றும் அண்மைய தொழில் திறன் மற்றும் பிரமாணம் பிரகடனங்கள், மற்றும் நிதிக் கூற்றுக்கள் மீதான அவர்களுடைய தாக்க புரிந்துணர்வு என்பவற்றை மீளாய்வு செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வெளிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் நேர்மையை கண்காணிப்பதற்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்ய வேண்டும்.
- கணக்காய்வு குழுவானது கொள்வனவு நடைமுறை மற்றும் கொள்வனவு திட்டத்தின் அமுலாக்கலின் முன்னேற்றம் என்பவற்றை மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

2022 இன் நடவடிக்கைகள்

- 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டின் போது ஏழு (07) கணக்காய்வு குழு கூட்டங்கள் நடைபெற்றதுடன் நிகழ்ச்சி நிரல் விடயங்களின் கீழ் பின்வரும் முக்கியமான விடயங்கள் விவாதிக்கப்பட்டன.
- AMC பட்டயம்
- 2020 கணக்காயவாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற விடயங்கள் கற்கை மீதான குழு அறிக்கைகள்
- கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்
- வற் (VATநீக்கல்) / பெறுமதி சேர் வரி மீதான முன்னேற்ற அறிக்கை
- பரீட்சிப்பு பட்டியல் மற்றும் மதிப்பாய்வு முன்னேற்றங்களை தயாரித்தல் (வர்த்தக பதிவழிப்புகள் மற்றும் சொத்துகள்/ வாகன பதிவழிப்புகள்)
- 2021.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்.
- 2022 மற்றும் 2023 இற்கான உள்ளக கணக்காய்வு திட்டம்.
- 2020 ஆம் ஆண்டிற்கான 4 அவது காலாண்டு கணக்காய்வு தொகுப்புகள் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான1 ஆவது, 2 ஆவது 3 ஆவது மற்றும் 4 அவது காலாண்டு கணக்காய்வு தொகுப்புகள்.
- 2022.06.30 மற்றும் 2022.09.30 இல் உள்ளவாறான காலாண்டு நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்
- 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு.
- அரசாங்க கணக்காய்வின் பிரதிநிதிகளும் ஆண்டின் போது அழைக்கப்பட்ட ஏழு (07) கூட்டங்களில் பங்குபற்றியிருந்தனர். குழுவானது தேவையின் அடிப்படையில் காலத்திற்கு காலம் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்களை அழைத்திருந்தது.

நிதிக் கூற்றுக்கள்

63 விரிவானவருமானக் கூற்று


65 நிதிநிலைமை கூற்று


66 உரிமை மூலதனமாற்றங்கள் கூற்று

67 காசுப் பாய்ச்சல் கூற்று

68 நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

92 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை




Rs

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை



முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள்

2022 மார்கழி 31

விரிவான வருமானக் கூற்று

2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	பாதீடு 2022 ரூபா	உள்ளபடியானது 2022 ரூபா	உள்ளபடியானது 2021 ரூபா
வருமானம் (வட் இன் நிகர)	7	40,082,030,000	**35,464,465,620**	28,935,444,532
விற்பனைக் கிரயம்	8	(22,514,108,123)	**(23,144,554,365)**	(19,162,945,539)
மொத்த இலாபம்		**17,567,921,877**	**12,319,911,255**	**9,772,498,993**
ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம்	9	2,001,301,000	**1,289,485,096**	1,796,124,476
நிர்வாகச் செலவினம்	10	(16,114,027,877)	**(14,449,590,943)**	(13,715,499,497)
ஏனைய செயற்பாட்டுச் செலவினம்	11	(700,000,000)	**(313,285,746)**	(997,912,577)
செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)		**2,755,195,000**	**(1,153,480,338)**	**(3,144,788,604)**
நிதி வருமானம்	12	800,000,000	**2,006,866,677**	842,533,384
நிதிக் கிரயம்	13	(527,230,000)	**(3,917,340,209)**	(752,071,879)
வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)		**3,027,965,000**	**(3,063,953,871)**	**(3,054,327,099)**
வருமான வரி (பொருளாதார சேவை கட்டணங்கள்)	14	-	**(33,795,903)**	(138,860,749)
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)		**3,027,965,000**	**(3,097,749,774)**	**(3,193,187,848)**

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 28 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள். மேலும் மேற்கண்ட வருமானக் கூற்றின் சுருக்கமான பதிப்பு இந்த அறிக்கைகளின் குறிப்பு எண் 35 இல் சேர்க்கப்பட்டுள்ளது.

விரிவான வருமானக் கூற்று

2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	பாதீடு 2022 ரூபா	உள்ளபடியானது 2022 ரூபா	உள்ளபடியானது 2021 ரூபா
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)	3,027,965,000	(3,097,749,774)	(3,193,187,848)
ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம்,			
கடனை மாற்றும் போது ஏற்படும் பரிமாற்ற இழப்பு	-	(181,137,567)	-
வருடத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிகர உண்மையான மதிப்பீட்டின் ஆதாயம் அல்லது இழப்பு			(223,219,689)
ஆண்டிற்கான ஏனைய மொத்த விரிவான வருமானம்		(181,137,567)	(223,219,689)
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	3,027,965,000	(3,278,887,340)	(3,416,407,537)

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 28 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

நிதி நிலைமைக் கூற்று

2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		உள்ளபடியானது	மீண்டும் கூறப்பட்ட மீதி
		2022	2021
சொத்துக்கள்		ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள்	குறிப்புகள்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	15	**276,966,312,149**	263,032,023,476
கற்பனைச் சொத்துக்கள்	16	**27,730,640**	20,429,157
செயற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள்	17	**584,908,992,114**	443,417,701,611
நிதிச் சொத்துக்கள்	18	**1,934,451**	1,889,780
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**861,904,969,354**	706,472,044,024
நடைமுறைச் சொத்துக்கள்			
இயக்கமற்ற சொத்துக்கள்	19	**149,748,448**	149,748,448
பொருளிருப்புகள்	20	**14,350,724,079**	9,851,694,973
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	21	**12,645,826,163**	10,680,472,901
வைப்புக்கள் மற்றும் முற்பணம்	22	**29,349,835,341**	28,865,804,324
முதலீடுகள்	23	**32,089,668,396**	24,349,404,858
காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		**4,088,000,534**	4,233,330,332
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**92,673,802,962**	78,130,455,835
மொத்தச் சொத்துக்கள்		**954,578,772,316**	784,602,499,859
உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்			
உரிமை மூலதனம்			
அரசாங்க திணைக்களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்	24	185,480,387	185,480,387
அரசாங்க மூலதனம் (பங்கு)	25	115,115,643,291	100,263,323,220
உத்தியோகத்தர் நலன்புரி நிதியம்	26	23,656,876	33,115,808
நிறுத்திவைத்த இலாபங்கள்		(16,491,314,485)	(13,221,886,077)
அரசாங்க மானியங்கள்	27	123,523,371,754	117,548,897,076
மூலதன மானியங்கள்	28	307,524,059,127	292,054,996,873
உரிமை மூலதனம்		529,880,896,950	496,863,927,288
நிலையான பொறுப்புகள்			
பெறவேண்டிய கடன்கள்	29	282,368,872,833	227,420,934,401
ஏனைய பிற்போட்ட பொறுப்புகள்	30	4,435,065,261	4,414,833,084
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்		286,803,938,094	231,835,767,485
நடைமுறைப் பொறுப்புகள்			
இயக்கமற்ற பொறுப்புகள்	34.2	51,287,805	51,287,805
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	31	69,511,675,272	40,103,085,274
செலுத்த வேண்டிய கடன் மூலதனம்	29	52,475,160,647	12,578,838,828
செலுத்த வேண்டிய கடன் வட்டி		15,855,813,547	3,169,593,179
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		137,893,937,271	55,902,805,086
மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்		954,578,772,315	784,602,499,859

ஆர். ஏம். ஏ. எச். வீரசேன
மேலதிக பொது முகாமையாளர் (நிதி)

வசன்தா இலங்கசிங்ஹ
பொது முகாமையாளர்

பக்க இலக்கம் 08 முதல் 14 வரையான பக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 15 முதல் 28 வரையான பக்கங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறிப்புக்கள் யாவும் நிதி கூற்றுக்களின் முக்கியமான பகுதிகளாகும். நிதி கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமாக பணிப்பாளர்கள் சபை பொறுப்புக் கூறுவர். இந்த நிதிக் கூற்றுக்கான அங்கீகாரம் பணிப்பாளர்கள் சபையினால் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் பொருட்டு கையொப்பமிடப்படுகின்றது.

நிசான்த ரனதுங்க
தலைவர்

டப்ளியூ. எம். எஸ். பி. விஜேகோன
உப தலைவர்

பங்கு மாற்றங்கள் சம்பந்தமான கூற்று
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக.

	குறிப்பு	அரசாங்க திணைக்களங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள்	அரசாங்க மானியங்கள்	அரச மூலதனம்	மூலதன மானியங்கள்	நலன்புரி மற்றும் ஏனைய நிதி	திரட்டிய இலாபம் / நட்டம்	மொத்தம்
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2021 ஜனவரி 01 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை		185,480,387	109,812,274,767	88,531,428,611	267,289,006,096	20,608,827	(9,016,059,633)	**456,822,739,054**
முன்னைய ஆண்டுச் சீராக்கல் -								
சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்	34.1.1						(336,075,872)	**(336,075,872)**
சொத்துக்களை கண்டறிவதற்கும் அகற்றுவதற்குமான பெறுமானத்தேய்வுச் சீராக்கல்	34.1.2						(462,031,009)	**(462,031,009)**
இருப்புக்கள்	34.2						2,227,080	**2,227,080**
வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகள்	34.2						3,468,465	**3,468,465**
வைப்புக்கள்	34.2						20,639,944	**20,639,944**
மூலதன மானியங்கள்	34.2						(431,329)	**(431,329)**
					(1,550,033)		1,550,033	-
2021.01.01 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை		185,480,387	109,812,274,767	88,531,428,611	267,287,456,062	20,608,827	(9,786,712,321)	**456,050,536,333**
ஆண்டிற்கான தேறிய இலாபம்							(3,416,407,537)	**(3,416,407,537)**
சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்	34.1.1						166,550	**166,550**
வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள்		-	7,736,622,310	-	24,767,540,811	-	-	**32,504,163,120**
கடன் தொகையை மூலதனமாக மாற்றுதல்	34.2			11,731,894,610	-	-	-	**11,731,894,610**
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்	34.2						5,711,933	**5,711,933**
இருப்புக்கள்	34.2						17,307,597	**17,307,597**
வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகள்	34.2	-	-	-	-	-	(29,445,318)	**(29,445,318)**
நலன்புரி நிதிக்கு மாற்றுதல்						12,506,981	(12,506,981)	-
2021.12.31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை		185,480,387	117,548,897,076	100,263,323,220	292,054,996,873	33,115,808	(13,221,886,077)	**496,863,927,288**
ஆண்டிற்கான தேறிய இலாபம்							(3,278,887,340)	**(3,278,887,340)**
வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள்			5,974,474,678		15,469,062,254			**21,443,536,932**
கடன் தொகையை மூலதனமாக மாற்றம்				14,852,320,071				**14,852,320,071**
நலன்புரி நிதிக்கு மாற்றுதல்						(9,458,932)	9,458,932	-
2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை		185,480,387	123,523,371,754	115,115,643,291	307,524,059,127	23,656,876	(16,491,314,485)	**529,880,896,950**

பக்க இலக்கம் 08 முதல் 28 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் யாவும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாகும்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

காசுப்பாய்ச்சல் கூற்று

2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	உள்ளபடியானது	மீண்டும் கூறப்பட்ட மீதி
		2022	2021
		ரூபா	ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /(நட்டம்)		**(3,063,953,871)**	**(3,054,327,099)**
சீராக்கலிற்கானது			
வட்டி வருமானம்	12	**(2,006,866,677)**	**(842,533,384)**
நிலையான சொத்து கைதவிர்பில் இலாபம் /(நட்டம்)		**3,875,213**	**21,504,234**
பெறுமானத் தேய்வு	10.2	**5,080,251,400**	**5,028,521,410**
ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு	30.1	**241,893,010**	**710,138,294**
வட்டிச் செலவினம்	13	**3,917,340,209**	**752,071,879**
தொழிறிபடு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		**4,172,539,285**	**2,615,375,334**
பொருளிருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		**(4,499,029,106)**	**(1,469,588,326)**
கடன்பட்டோர், பெறவேண்டியவை மற்றும் வைப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		**(2,483,180,183)**	**139,054,243**
கடன்கொடுத்தோர் மற்றும் ஏற்பாடுகளில் அதிகரிப்பு)/ குறைவு		**29,428,822,174**	**6,409,190,184**
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு		**26,619,152,170**	**7,694,031,434**
செலுத்திய வரி			-
செலுத்திய பணிக்கொடை	30.1	**(241,893,010)**	**(568,916,918)**
செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்		**26,377,259,160**	**7,125,114,517**
முதலீட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
நிலையான சொத்துகள மறறும நடபெறும வலைகளில முதலீடு		**(145,817,410,799)**	**(80,943,003,679)**
நிதி சொத்துக்களின்		**(44,671)**	**(36,273)**
அகற்றும் சொத்துகளுக்கான விற்பனை வருமானம்		**9,138,224**	**5,772,078**
பெறப்பட்ட முதலீட்டு வருமானம்		**2,006,866,677**	**842,533,384**
முதலீடுகளின் (முதலீடு) / பற்றுதல்கள்	34.2	**(7,740,263,539)**	**(750,413,670)**
முதலீட்டு நடவடிக்கைகள் /(பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		**(151,541,714,108)**	**(80,845,148,159)**
நிதி நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
முன்னைய ஆண்டின் போதான அரசாங்க மானியம்		**5,974,474,678**	**7,736,622,310**
முன்னைய ஆண்டின் போதான மூலதன மானியம்		**18,269,821,832**	**27,178,674,810**
புதிய கடன்கள் மற்றும் பங்கு மாற்றத்திற்கான கடன் ரசீதுகள்		**119,574,514,646**	**63,526,231,118**
கடன் திருப்பிச் செலுத்தல்கள்		**(10,059,071,890)**	**(12,890,903,881)**
செலுத்திய வட்டி		**(8,740,614,116)**	**(9,432,198,020)**
நிதி நடவடிக்கைகள் /(பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		**125,019,125,149**	**76,118,426,337**
காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு		**(145,329,799)**	**2,398,392,695**
ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		**4,233,330,332**	**1,834,937,637**
ஆண்டு இறுதியிலுள்ள் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		**4,088,000,534**	**4,233,330,332**

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 28 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2022 மார்கழி 31

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

1. திரட்டிய தகவல்கள்

1.1 பொதுவானவை
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 1974 இன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரச்சட்டதின் கீழ் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டச் சபையொன்றாக உள்ளது. சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இரத்மலானை, காலி வீதியில் அமைந்துள்ளதுடன் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் அதே இடத்தில் அமைந்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது (என்டபிள்யூஎஸ்&டிபீ) நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசத்கள் அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையின் கீழான நிறுவனமொன்றாக உள்ளது.

1.2 பிரதான நடவடிக்கைகள்
சமுதாயத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை தயார்செய்து விற்பனை செய்யவதே சபையின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளது.

நாடு முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை விருத்தி செய்து இலங்கையை சிறந்த நாடாக கட்டியொழுப்புவதே தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குறிக்கோள்களாக உள்ளது.

1.3 சபையின் தொடர்ச்சியான இருப்பு
தொடர்ச்சியான இருப்பை தக்கவைத்துக்கொள்வதன் நிமித்தம் சபையிடம் காணப்படும் திறமை குறித்து முகாமைத்துவத்தினால் மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்பார்க்கப்படுகின்ற வருங்காலத்திற்காக வியாபாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான வளங்கள் காணப்படுவதனால் அவ்விடயம் சம்பந்தமாக திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான தக்கவைத்துக்கொள்வதன் நிமித்தம் சபையிடம் காணப்படும் திறமை தொடர்பாக குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய போதியளவான நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் அறிந்திருக்காததுடன், அவர்களிடம் சபை நடவடிக்கைகளை கலைப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான எண்ணம் கிடையாது. ஆகவே, நிதிக் கூற்றானது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதன் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

2. தயாரிப்பு அடிப்படை

2.1 இணக்க பிரகடனம் நிதிக்கூற்றுக்களின் இணக்கம்
இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் (CA Sri Lanka) வெளியிடப்பட்டுள்ள கணக்கு தரநிலைகளுக்கு (SLFRS/ LKAS) அமைவாக வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக்கூற்று, உரித்து மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று போன்றவை தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 அளவீட்டு அடிப்படை
நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதிக் கூற்றுக்கள் ரூபா வில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடப்பட்டவற்றைத் தவிர சகல பெறுமதிகளும் அண்ணளவாக ஆயிரத்திற்கு (ரூபா 000) குறிப்பிடப்பட்டது.

2.3 சமர்ப்பிக்கப்படும் நிதி அலகு
நிதிக் கூற்றானது இலங்கை ரூபாவினால் (LKR) முன்வைக்கப்பட்டுள்ளது. அது சபையின் செயற்படுத்துதல் மற்றும் சமர்ப்பித்தலுக்குரிய நிதி அலகாகும்.

3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களானது கிரயம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய பெறுமதிகுறைப்பு நட்டங்கள் என்வற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏதாவது பிரமாணம் அங்கீகாரம் செய்கின்ற போது ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மீளளிப்பு கிரயத்திலும் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களிற்கான கடன்பெறல் கிரயங்களிலும் என்பவற்றை அத்தகைய கிரயங்கள் உள்ளடக்குகிறது. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதிகள் ஒரேயளவு இடைவெளிகளில் மீள்நிரப்பப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. தேசிய நீர்வழங்ல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அவற்றினை இதன்படி குறிப்பாக பாவணைக் காலம் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றுடன் தனித்தனியான

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

சொத்துக்களாக அத்தகைய பகுதிகளாக அடையாளப்படுத்துகிறது. அவ்வாறே, பிரதான பரிசோதனைகளை செயற்படுத்தும் போது அதன் கிரயம் பிரமாண அங்கீகாரங்களை திருப்திசெய்கையில் மாற்றீடாக பொறி மற்றும் உபகரணங்களின் தொகையை மேற்கொள்கையில் அங்கீகரிக்கின்றது. ஏனைய சகல திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்கள் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

நிதியேற்பாடுகளிற்கான பிரமாண அங்கிகாரங்களை செய்கையில் உரிய சொத்துக்களின் கிரயத்தில் அதன் காலத்தின் பின்னர் சொத்தொன்றின் தரகு குறைப்பதற்காக எதிபார்க்கப்பட்ட கிரயத்தின் தற்போதைய பெறுமதியை உள்ளடக்குகிறது.

3.1.1 பெறுமானத்தேய்வு
பின்வருமாறு சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலத்திற்கு மேலாக நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகிறது.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு	1.67% - 2%
சுத்திகரிப்பு பொறி மற்றும் உபகரணங்கள்	5 %
சேவைகள் மற்றும் மொத்த தண்ணீர் அளவைமானி	10%
பரிமாற்ற பொறி மற்றும் விநியோகக் குழாய்கள்	1.67%
உபகரணங்கள்	10%
தளபாம் மற்றும் பொருத்திகள்	10%
கணனிகள் உபபாகம் மற்றும் கையடக்க தொலைபேசிகள்	20%- 33.3%
மோட்டார் வாகனங்கள்	10%- 20%
குத்தகையுடமை வாகனங்கள்	14.3 %

3.1.2 செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி
மூலதனமாக்கப்படாத மற்றும் ஆண்டினுள் செலவிடப்பட்ட மூலதனச் செலவு ஆகியவை செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி எனக் குறித்துக்காட்டப்படுவதுடன், ஆண்டினுள் மூலுதனமாக்கப்பட்ட மற்றும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் உடைமைகள் யாவும் சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக மாற்றியமைக்கப்படும்.

3.1.3 குத்தகை
ஒழுங்கமைப்புள்ளதா அல்லது அதனைக் கொண்டுள்ளதா எனவும், பரிசோதனை திகதியில் பொருள்களை அடிப்படையாக ஒழுங்கமைப்புகள் கொண்டுள்ளதா எனவும், குறித்த சொத்தொன்றோ அல்லது சொத்துக்களோ பயன்படுத்துவதில் ஒழுங்கமைப்புக்களை நிறைவேற்றலில் தங்கியுள்ளதா அல்லது சொத்துப் பயன்பாட்டு உரிமை ஒழுங்கமைப்புக்களையோ ஒப்படைக்கின்றதா எனவும் நிர்ணயித்தல், அவ்வாறே, குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புக்களில் அவ்வுரிமை வெளிப்படையாக இருக்கவில்லை.

3.1.4 கற்பனைச் சொத்துக்கள்
கையேற்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பு கிரயத்தில் தனித்தனியாக அளவிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆரம்ப அங்கீகாரம் கற்பனைச் சொத்துக்களின் கிரயத்தை பணமதிப்பு நீக்கத்தினுடாக கழிதிதல் மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் தவிர்ந்தவை மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் செலவினங்கள் ஆண்டில் ஏற்பட்டிருந்த செலவினத்தில் வருமானக் கூற்றில் தாக்கமேற்படுத்தியது. கையகப்படுக்கும் கணனி மென்பொருள் கற்பனைச் சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுவதுடன் மேலும் அவை 7 வருட காலத்திற்குள் பணமதிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது.

3.1.5 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிரயங்கள்

ஆராய்ச்சிக் கிரயங்கள் ஏற்பட்டதாக செலவழிக்கப்பட்டன. தனிப்பட்ட செயற்திட்டங்கள் மீது அபிவிருத்திச் செலவினங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செய்முறைப் பயிற்சியளிக்க முடிந்த போது கற்பனைச் சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

- சொத்துக்கள் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கொ கிடைக்கும் என்று கற்பனைச் சொத்துக்களை முழுமையாக்குகின்ற தொழில்நுட்ப சாத்தியவள அறிக்கை.
- முழுமையாக்குவதற்கான அதன் செயல்திட்டமும் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அதன் இயலுமை.
- சொத்துக்கள் எதிர்காலத்தில் எப்படி பொருளாதார நலன்களை ஏற்படுத்தும்.
- சொத்துக்களை முழுமையாக்குவதற்கு வளங்களின் கிடைப்பனவு
- அபிவிருத்தியின் போது உண்மைத்தன்மையான செலவினத்தை அளவிடுவதற்கான இயலுமை.

சொத்தாக பின்வரும் ஆரம்ப பெறுதி குறைப்பு அபிவிருத்திச் செலவினம், சொத்துக்களை கிரயக் கழிவின் திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி முழுமையாக்கும் போது சொத்துக்களின் தீர்ப்பனவு ஆரம்பிக்கின்றதுடன் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நன்மைகளின் காலத்திற்கு மேலாக தீர்க்கப்பட்டிருந்தது. கடன் தீர்ப்பனவு விற்பனைக் கிரயத்தில் பதியப்பட்டுள்ளது. அபிவிருத்திக் காலத்தின் போது சொத்துக்கள் வருடாந்த பெறுமதிக் குறைப்பிற்காக பரீட்சிக்கப்பட்டது.

3.1.6 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் சொத்துக்கள் கட்டாயமாக பெறுமதி குறைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படடுள்ளதா எனவும், குறிப்பாக அவ்வாறு இருக்கையில், அல்லது கையேற்கப்பட்ட சொத்துக்களிற்காக வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பின் போது, சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மதிப்பிடுகின்றது. சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை சொத்துடமையாளருடைய அல்லது விற்றுக் காசு உருவாக்குகின்ற பிரிவினுடைய (சிஜீயூ) சந்தைப் பெறுமதி கழித்த பயன்பாட்டுக் கிரயங்கள் மற்றும் அதன் பெறுமதி உயர்வாகவுள்ளமையால் தனிப்பட்ட சொத்தாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இல்லையேல், ஏனைய சொத்துக்களிலிருந்து தனித்துவப்படுபவையா அல்லது சொத்துக்களின் தொகுதி பெருமளவு தனித்துவமாக உள்ளதா என காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சொத்துக்கள் உருவாக்கியிருக்கவில்லை. சொத்துக்கள் அல்லது சீஜீயூ இன் முற்கொண்டுவரும் தொகை அதன் அறவிட வேண்டிய தொகையை விஞ்சியிருந்தது. சொத்துக்கள் மெறுமதி குறைத்து மதிப்பிட கருத்திற்கொள்ளப்பட்டதுடன் அதன் அறவிட வேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடுகையில், எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் பணப்பெறுமதி மதிப்பிடுகையில் தற்போதைய சந்தைப் பெறுமதி தாக்கம் மற்றும் சொத்துக்களிற்கான குறிப்பிடத்தக்க ஆபத்துக்களென வரிக்கு முன்னரான கழிப்பனவை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுடைய தற்போதைய பெறுமதிக்கு கழிவுவழங்கப்படுகின்றன. விற்பனை செய்வதற்கு நியாயபெறுமதி குறைவு கிரயங்களை நிர்ணயிக்கையில், அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிற்கு எடுக்கப்படுகின்றன. அதேவேளையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இனங்காண முடியாதுள்ளது. முறையான பெறுமதியிடல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.2.1 பொருளிருப்புக்கள்

பொருளிருப்புக்களின் மதிப்பு கிரயத்தில் பதியப்படுவதுடன் தேறிய உண்மையான பெறுமதி ஏதாயினும், பழுதடைந்தவற்றிற்கான நிலுவை படிகளை செய்த பின்னர் குறைவாக உள்ளவற்றுடன் மெதுவாக அசையும் விடயங்கள் முதல் வந்து முதல் செல்லல் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டிருந்தது. தேறிய உண்மையான பெறுமதி சாதாரண வியாபாரத்தின் போது, முழுமையாக்கலின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கழிப்பனவு மற்றும் அவசியமான விற்பனைகளைச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்கள் என்பவற்றின் விற்பனை விலையை மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளிருப்பின் அளவீடு

3.2.2 பொருளிருப்பின் கிரயங்கள்

மூலப் பொருட்கள்
ஏதாவது இடைநேர் செலவினங்களுடன் சேர்த்து கொள்வனவுக் கிரயம்

ஏனைய இருப்புக்கள்
கிரயம் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் அமைந்துள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3.3 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்

காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, இடைப்போக்கிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் நிலுவையாகவிருக்கின்ற தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளது.

4 பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் உரிமை மூலதனம்

4.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்பு

4.1.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்புக்கள் (எல்கேஏஎஸ் 19)

(அ) பிற்போட்ட நலத் திட்டம்- பணிக்கொடை

இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 எல்கேஏஎஸ் 19) உடன் இணங்கி சகல ஊழியர்களும் சேவையாற்றிய முதலாவது ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் விலை மற்றும் அவற்றின் கடமைகளின் விளக்கக்காட்சி மதிப்பு ஆகியவை உண்மையான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. தள்ளுபடி விகிதங்கள், எதிர்கால சம்பள உயர்வுகள், இறப்பு விகிதங்கள் பற்றிய அனுமானங்களைச் செய்வதை உண்மையான மதிப்பீடு உள்ளடக்குகிறது. இந்தத் திட்டங்களின் நீண்ட கால இயல்பு காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளது. ஒவ்வொரு அறிக்கையிடும் தேதியிலும் அனைத்து அனுமானங்களும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. பொருத்தமான தள்ளுபடி விகிதத்தை நிறுத்துவதில், வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமையின் எதிர்பார்க்கப்படும் காலப்பகுதியுடன் தொடர்புடைய முதிர்வுகளுடன் கூடிய இலங்கை அரசாங்கப் பத்திரங்களின் வட்டி விகிதங்களாகக் கருதப்படுகிறது. இறப்பு விகிதம் பொதுவில் கிடைக்கும் அறநெறி அட்டவணைகளை அடிப்படையாகக் கொண்டது. ஏதிர்கால சம்பள உயர்வுகள் சபையின் எதிர்பார்க்கப்படும் சம்பள உயர்வு விகிதத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) ஓய்வூதிய நலக் கிரயம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டமொன்று செயற்படுகின்றதுவரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கிரயங்கள் செயற்படுத்தப்பட்ட கடன் முறை பிரிவு பயன்படுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்திற்கான உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில்

அவை ஏற்பட்டிருந்த காலத்தில் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. அத்தகை உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் நிறுத்திவைத்த இலாபங்களிலும் உடனடியாக அனுமதிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டங்ளிற்கு மீள வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையறுக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் நன்மைகளாக வரையறுக்கப்பட்டிருந்த இதுவரையான சராசரி காலத்தினை விட நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. கடந்த சேவைக் கிரயங்கள் பின்வரும் உள்ளடக்கங்களின் அல்லது மாற்றங்களிற்கு அல்லது ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே நன்மைகளை வைத்திருந்தால் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருந்தன.

வரையறுக்கப்பட்ட நலச் சொத்து அல்லது பொறுப்பு வரையறுக்கப்பட்ட நல கடமைப் பொறுப்புக்களின் (பெறுமதி உயர்ந்த தர ஒன்றிணைந்த பிணைகளின் அடிப்படையில் கழிவு வீதம் பயன்படுத்துகின்றது) தற்போதைய பெறுமதியைக் கொண்டுள்ளது. கடமைப்பொறுப்புக்களில் திட்டச் சொத்துக்களின் கழிவு அனுமதிக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் மற்றும் கடமைப்பொறுப்புக்களிலுள்ள சொத்துக்களின் நியாயப் பெறுமதி தீர்ப்பனவு செய்யவேண்டியுள்ளது. திட்டச் சொத்துக்கள் நீண்ட கால ஊழியர் நலன்புரி நிதியம் அல்லது தரமதிப்பீட்டு காப்புறுதி கொள்கைகள் என்பவற்றின் மூலம் இடம் பெற்றிருந்த சொத்துக்கள்

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2022 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

உள்ளன. திட்டச் சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கடன்கொடுத்தோருக்கு கிடைத்திருக்கவில்லை அல்லது அவை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நேரடியாக செலுத்த முடிந்திருக்கும். ஏதாவது அங்கீகரித்த நிர்ணயித்த நலன்புரிச் சொத்துக்கள் ஏதாவது அங்கீகரிக்கப்பட்டிருக்காத கடந்த சேவைக் கிரயங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் திட்டத்திலிருந்தான மீளளிப்பிலிருந்து கிடைத்த ஏதாவது பொருளாதார நன்மைகளின் தற்போதைய தொகை அல்லது திட்டத்திற்கு எதிர்காலத்தில் பங்களிப்பை குறைத்தல் என்பன மூலம் மீளமைக்கப்பட்டிருந்தது.

நிர்ணயித்த பங்களிப்புத் திட்டங்கள்- ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர்கள் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புகளிற்கு தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்களாக முறையே 12 % மற்றும் 3 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

4.2 ஏற்பாடுகள்

பொதுவானது

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது நடந்துமுடிந்த நிகழ்வின் விளைவாக சட்ட அல்லது நிர்ணயிப்புகளை மீறியிருந்த போது (சட்டம் அல்லது கட்டளைச்சட்டம்) ஏற்பாடுகளை அனுமதித்திருந்தது. ஐந்தொகையில் ஏற்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மற்றும் பொருளாதார நலன்களின் வெளியீடு அதன் இலாபத் தன்மை மீறல்களை சரிசெய்வதற்கு வேண்டுகை செய்ய வேண்டியதுடன் உண்மையான மதிப்பீடொன்றினை மீறிய தொயினையும் செய்ய முடியும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சில அல்லது சகல ஏற்பாடுகளையும் எதிபார்க்கப்படுகின்ற போது மீள்நிதியிடப்பட வேண்டியிருந்தது. உதாரணமாக, காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் மீள்நிதியிடல் சொத்துக்களை புறம்பாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால், குறித்த சில மீளளிப்புகள் நிலைக்குத்தாக மாத்திரமுள்ளது. நிதிறேபாடுகளுடன் தொடர்புபட்ட செலவினம் ஏதாவது தேறிய மீளளிப்பினை வருமானக்கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.3 அரசாங்க மானியங்கள்

மானியங்கள் பெறப்பட வேண்டியதுடன் சகல நிபந்தனைகளுடன் இணங்கியிருக்க வேண்டுமென பொருத்தமான காப்பீடு உள்ள அரசாங்க மானியங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் செலவினங்களுடன் தொடர்புபடுகின்ற போது, இழப்பீடு வழங்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கிரயங்களே செலவழிக்கப்பட்டுள்ளதென குறித்த காலத்திற்கு மேலாக முறையான அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது. மானியங்கள் சொத்துக்களுடன் தொடர்புபடுகின்ற போது தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்திற்கு மேலாக சமமான தொகைகளில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது.

(உ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 12) பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்ட மற்றும் தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் ரூபா 75,510,930,776 தொகையான கிரயம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலைகளில் இருந்தது.

(ஊ) முற்கொண்டுவரப்பட்ட ரூபா 33,795,903 ஆன சிக்கன சேவைக் கட்டண தொகை மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் வருமான வரிச் செலவினமாக தவறான

அடையாளம் கணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமான வரிச் செலவினம் அனுமதிக்கும் நோக்கில் வரிக் கணிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) எட்டு கிரய நிலையங்கள் தொடர்பில் ரூபா 125,540,714 கூட்டுத் தொகையான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், பிராந்திய ஆதார நிலையங்களில் ரூபா 991,976,449 பெறுமதியான சொத்துக்களின் தொகை பௌதீக ரீதியாக ஏடுகளின் மெய்மையாய்வு பிரகாரம் தெளிவாக அடையாளம் காண முடியவில்லை. எவ்வாறாயினும், நிதிப் பிரமாணங்கள் 102, முதல் 105 வரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கைகள் எடுக்காமல் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்விற்காக ரூபா 36,364,018 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஏ) ஏனைய கடன்பட்டோர், முற்பணங்கள், வியாபார கடன்கொடுத்தோர், கோரப்படாத சம்பளங்கள் போன்றன உள்ளடங்கலாக இருந்த ரூபா 149,748,448 மற்றும் ரூபா 51,287,805 ஆன முறையே நிலுவையாகவிருக்கின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன இருக்கின்றதற்கான காரணங்களை இனங்காண நடவடிக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகவே, நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கம் மதிப்பிட முடியாதிருந்தது. மேலும், ரூபா 235,123,315 ஆன இனங்காணப்படாத முன்னைய ஆண்டு மீதிகள், ரூபா 22,007,307 ஆன இருப்பு மீதிகள் ரூபா 8,343,056 ஆன வங்கி மீதிகள் மற்றும் ரூபா 15,227,490 ஆன அமைச்சிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் என்பன மேற்குறிப்பிட்ட மீதியில் செயற்பாடற்ற சொத்து மீதிகளில் இருந்தது.

(ஐ) நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட கடன்கள் தொடர்பில் தவணைப்பண மீளச் செலுத்துதல் மற்றும் வட்டி கொடுப்பனவிலுள்ள தாமதங்கள் காரணமாக தண்டப்பண வட்டியாக ஏற்பட்ட ரூபா 107,302,970 இற்கு சமமான தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ஆதலால், மீளாய்வாண்டிற்கான நட்டங்கள் அதேதொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2020 யூலையில் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், பொதுத் தறைசேரியால் செலுத்தப்பட வேண்டுமென தேசிய சேமிப்பு வங்கிகளிடமிருந்து ரூபா 30 பில்லியன் பெறப்பட்டதுடன் சபையானது 2020 ஆம் ஆண்டில் அந்த கடன் மீதான வட்டியாக ரூபா 699,702,314 ஆன தொகை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டியவையாக ரூபா 659,277,279 மாத்திரம் அடையாளம் காணப்படடிருந்தது. ஆகவே, நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 40,425,035 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) பிராந்திய ஆதார நிலையங்களின் சொத்துப் பதிவேடுகளில் பதியப்பட்ட இரண்டு கட்டிடங்கள், ஐந்து காணிகள், ஒரு முச்சக்கர வண்டி, ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் உழவு இயந்திரம் மற்றும் ரைளர் போன்ற சொத்துக்களை பெறுமதியை மதிப்பீடுசேய்து கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) இ.க.நி 37 இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரையும் கணக்கேடுகளில் செலுத்தப்படாதிருந்த சிக்கன சேவைக் கட்டணங்களிற்காக 2016 முதல் 2017

வரையான காலத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிமதிப்பீட்டின் பிரகாரம் செலுத்த வேண்டியவையாக ரூபா 66,369,263 ஆன மிகுதி தொகைக்காக ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதிய இணைப்புகள் உள்ளடங்கலான வியாபார கடன்பட்டோர் மீதிகள் ரூபா 8,450,830,193 ஆக இருந்தது. எவ்வாறாயினும், ரூபா 8,269,217,708 தொகையான கடன்பட்டோருக்கு மாத்திரமே கடன்கழிவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எனவே, ரூபா 181,612,485 தொகையான கடன்பட்டோருக்கு ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்விற்காக முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த சீராக்கல்கள் நிதிக்கூற்றுக்களில் பொருளியல் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், ஆரம்ப நிறுத்தி வைத்த இலாபங்கள் மீளாய்வாண்டு நிலையான சொத்துக்களில் செய்யப்பட்ட முன்னைய சீராக்கல் காரணமாக ரூபா 519,671,859 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

1.2.3 இணக்கம் செய்யப்படாத மீதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) VAT அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீட்டர் விற்பனைகளின் பெறுமதி, மொத்த விற்பனை மற்றும் பவுசர் வழங்கல்கள் என்பவற்றிற்கு இடையில் ரூபா 1,972,333,220 ஆன இணக்கம் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாதிரி கணக்காய்வு செவ்வையில் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை உரிய தனிப்பட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது ஆறு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் வெளிநாட்டு மானியங்களில் ரூபா 35,868,992,967 கூட்டுத் தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) மாதிரி கணக்காய்வு செவ்வையில் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதிகளிற்கும் உரிய தனிப்பட்ட பத்து வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களின் நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 1,793,072,246 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிர்மாண வேலைகளின் மீதிகளிற்கும் சப்ரகமுவ பிராந்திய ஆதார நிலையாத்தால் உறுதிப்படுத்தப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 65,511,961 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) மாதிரி கணக்காய்வு செவ்வையில் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் கைதவிர்ப்பு மீதிகளிற்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் CS-DRMS அறிக்கையில் (814) காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 6,656,905,735 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) சபையின் மூலதன பங்களிப்பு தொடர்பில் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் பொது திறைசேரியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 20,435,860,610 ஆன வித்தியாசங்கள் இனங்காணப்பட்டது.

(எ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் கீழான இடைபோக்கிலுள்ள காசு மற்றும் கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கு என்பவற்றில் உள்ளவற்றை தெளிவுபடுத்தாமல் ஆறு மாதங்களிற்கு மேலாக முறையே ரூபா 2,861,454 மற்றும் ரூபா 220,718,661 ஆன இனங்காணப்படாத வித்தியாசங்கள் இருந்தது.

1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி	கிடைக்கப்பெற்றிராத சான்றுகள்
		ரூபா	
(அ)	ஏனைய கடன்பட்டோர்	106,007,906	விரிவான பட்டியல்கள் (217 மற்றும் 219)
(ஆ)	ஏனைய கடன்கொடுத்தோர்	306,911,958	விரிவான பட்டியல்கள்
(இ)	ஏனைய நிறுவனங்களிலுள்ள குறுகிய கால வைப்புகள்	5,561,100	விரிவான பட்டியல்கள் மற்றும் உள்ள தன்மைக்கான காரணங்கள்
(ஈ)	பிடித்துவைத்தல் வரி	111,540,885	விரிவான பட்டியல்கள் மற்றும் சான்றிதழ்கள்
(உ)	அரசாங்க திணைக்களத்திலிருந்து கையேற்கப்பட்ட சொத்துக்கள்	185,480,387	கையேற்கப்பட்ட சொத்துக்களின் விரிவான பட்டியல்
(ஊ)	திறைசேரி மானியங்கள்	104,950,118,240	மானியங்களுடன் சம்பந்தமான செயற்திட்டங்களின் விரிவான பட்டியல்கள்
(எ)	மூலதன மானியங்கள்- உள்ளூராட்சி அதிகாரசபை	1,107,413,083	மானியங்களுடன் சம்பந்தமான செயற்திட்டங்களின் விரிவான பட்டியல்கள்
(ஏ)	வெளிநாட்டு மானியங்கள்	3,657,640,079	மானியங்களுடன் சம்பந்தமான செயற்திட்டங்களின் விரிவான பட்டியல்கள்
(ஐ)	திரண்ட மானிய பட்டியல்	2,797,207,561	மானியங்களுடன் சம்பந்தமான

செயற்திட்டங்களின் விரிவான பட்டியல்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் சபையின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் (வரைவு வருடாந்த அறிகை) அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது. பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்காக கூட்டிணைந்த ஆளுகைகள் மீதான வழிகாட்டல்களின் பிரகாரம் பின்வரும் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) பொருளாதார பெறுமதி சேர்க்கப்பட்ட ஆளுகை மீதான கூற்று

(ஆ) ஆபத்துக் குழு உறுப்பினர் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் மற்றும் கூட்டத்தில் பங்குபற்றியோர் விபரங்கள்

(இ) நிறுவனத்தின் ஒட்டுமொத்த நோக்கெல்லை பற்றிய தெளிவான வரைபடம்

(ஈ) முன்னைய பத்து ஆண்டுகளில் நிதிச் சுட்டிக்காட்டல்கள்

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் சபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 1.2.1(அ), (ஆ), (இ), (ஈ), 1.2.2(இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), 1.2.3(அ), (ஆ), (இ), (ஈ), (ஊ) மற்றும் 1.2.4 ஆம் பந்தியினை தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு இறுதி அறிக்கைகளில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

சட்டங்கள் / நெறிப்படுத்தல்களிற்கான தொடர்பு	விபரங்கள்
(அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியொழுப்புதல் அதிகாரச்சட்டத்தின் 4.1 ஆம் பிரிவு	சபையானது மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் செயற்திட்டம் தொடர்பில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2019 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 80,509,796 ஆன தேசத்தை கட்டியொழுப்புதல் வரியை செலுத்தியிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 1.8, 4.6 மற்றும் 7.4 ஆம் பிரிவு	சேவையை விட்டு விலகிய (பதவிவறிதாக்க்பட்ட), இராஜினாமா செய்த மற்றும் இடைநிறுத்தப்பட்ட பதினேழு (17) ஊழியர்யர்களிற்காக முறையே ரூபா 945,883, ரூபா 305,642, ரூபா 442,815 மற்றும் ரூபா 197,426 கூட்டுதொகையான தொகை அவர்களுடைய வேதனங்களிற்கு அவர்கள் தகுதியற்றிருந்த பொதிலும் மூன்று அண்டுகளிற்கு மேலாக காலப்பகுதியாக கணக்கேடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.
(இ) முழு கொடுப்பனவு கல்வி விடுமுறை மீதான நடைமுறையில் உத்தியோகத்தர்களால் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் 13(ஆ) ஆம் பந்தி மற்றும் தாபன விதிக் கோவையின் XV (2013) ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு	சபையானது கல்வி விடுமுறை பூர்த்தியான பின்னர் சபையில் சேவையை தொடருவதை நிரூபிக்க முடியாத ஊழியர்களிடமிருந்து புலமைப் பரிசில்களிற்காக செய்யப்பட்ட செலவினங்களின் பெறுமதி மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. பிணை முறிகளின் பெறுமதி ரூபா 20,190,832 ஆக இருந்தது.
(ஈ) 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூல்	
(i) பந்தி 3.5	மீளாய்வாண்டின் போது சபையானது 2022 திசெம்பர் 31 அளவில் உரிய அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட பதினைந்து ஊழியர்களிற்காக சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 22.87 மில்லியன் செலுத்தியிருந்தது. இதன்படி, நீர் வழங்கல் அமைச்சானது 2015 திசெம்பர் மாதத்திலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக சபைக்கு ரூபா 238.99 மில்லியன் மீளளிக்க வேண்டியிருந்தது.
(ii) பந்தி 5.1	இந்த ஏற்பாட்டின் கீழ் திரண்ட நிதியத்திற்கு வரிகள் மற்றும் இலாபம் பகிரப்பட்ட பின்னரே மிகையூதியம் அல்லது ஊக்குவிப்பு செலுத்தப்பட வேண்டும். அதற்கு

	முரணாக சபை அனுமதியின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்காக மிகையூதியத்திற்கு பதிலாக உற்பத்தி ஊக்குவிப்பாக ரூபா 269,323,092 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சபையானது மீளாய்வாண்டின் போது ரூபா 3.2 பில்லியன் நட்டத்தை அடைந்திருந்தது.
(iii) பந்தி 6.9	இரண்டு பிராந்திய ஆதார நிலையங்கள் தொடர்பில் வீட்டு நுகர்வுகள் மீதான ரூபா 5,554,376 தொகை மற்றும் கற்றன் நீர் வழங்கல் திட்டம் தொடர்பில் ரூபா 3,526,969 தொகையான நிலுவையாகவிருக்கின்ற மீதி மீளாய்வாண்டின் பொது திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்ளாமல் குழு அனுமதியின் அடிப்படையிலேயே பதிவழிக்கப்பட்டிருந்தது.
(உ) 2006 செப்தெம்பர் 22 ஆந்திகதி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டு கைநூலின் 3.2(i) ஆம் பிரிவு மற்றும் DMS பணிப்பாளர் நாயகத்தின் 2011 மே 23 ஆந் திகதிய DMS/E2/19/4/064 ஆம் இலக்க கடிதம்	சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக 2023 மார்ச் இறுதிவரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.
(ஊ) 2019/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் 176 ஊழியர்களின் ஆட்சேர்ப்பிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்காததுடன் அந்த ஊழியர்களிற்காக 2022 யூலை 31 வரை சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 216,711,905 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(எ) 2020 சனவரி 27 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை	
(i) பந்தி 1.2	பொது திறைசேரி செயலாளரின் அறிவுறுத்தல்களை பெறாமல் சபையின் வாகன கொள்கையின் கீழ் 5/15/2022-898 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கமைய தலைவரிற்காக மூன்று வாகனங்களும் உப

தலைவரிற்காக இரண்டு வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தது. இதன்படி, தலைவர் மற்றும் உப தலைவர் ஒரு வாகனத்திற்கு பதிலாக இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது.

(ii) பந்தி 1.4

2021 சனவரியிலிருந்து பொது திறைசேரி செயலாளரில் அறிவுறுத்தலை பின்பற்றாமல் சபையின் தலைவர் மற்றும் உப தலைவர்களிற்கான மாதம் ஒன்றிற்கு 150 லீட்டர் எரிபொருளிற்கு மேலாக ரூபா 60,000 தொகையான எரிபொருள் கட்டுநிதியை சபை பணிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) பொது முகாமையாளருடைய சுற்றறிக்கைகள்

(i) 2015 ஆகஸ்ட் 12 இன் நிர்வாகம்/12/2015

நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு துண்டிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களிற்குள் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியல் பெறுமதி ரூபா 50,000 இற்கு மேல் நிலுவையாகவிருக்கின்ற 4,932 துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பான ரூபா 784.5 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல். தவிர

  (அ) பின்தங்கியோருக்காக மற்றும் நீர் வளக் குறைவு காரணமாக பாதிக்கப்பட கூடிய வாடிக்கையாளர்களிற்கு நீர் வழங்குவதற்காக தண்ணீர் தொட்டிகளை வைப்பதற்கு பொருத்தமான இடங்களுடன் மூப்பது கிறீவ் கப்கள் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 228,540,780 இல் கொள்வனவு செய்யப்பட்டது, நீர் தேக்கங்களில் உப்புநீர் தடை அறிவுறுத்தல் மற்றும் நீர் வழங்களிற்கான விநியோக முறைமைகளில் தரி அமுக்கம் என'பன மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, உருக்கு இரும்பு மற்றும் கிறீவ் கப்களில் தண்ணீர் தொட்டிகளை

பொருத்துவதற்காக பொருத்தமான இரும்பு தகடுகளை பொருத்துவதற்காகவும் செலவழித்த ரூபா 24,000,000 ஆன தொகை சபைக்கு சிக்கனமற்றதாக இருக்கும்.

(ஆ) பதினேழு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் ஐந்து உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் 02 முதல் 07 வரையான சந்தர்ப்பங்களில் கால நீடிப்புகள் வழங்கிய பின்னரும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், காணி பெற்றுக்கொள்வதில் தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் போன்ற காரணமாக 275 நாட்கள் முதல் 2,131 நாட்கள் வரையான கருத்திற்கொள்ள வேண்டிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது.

(இ) கம்பஹா, அதனாகல மற்றும் மினுவாங்கொடை நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு வங்கியால் கைதவிர்க்கப்பட்ட கடனில் செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து 5 தடவைகளில் 2023 திசெம்பர் வரை செயற்திட்ட பூர்த்தியாக்கல் காலப்பகுதி நீடிக்கப்பட்ட போதும் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 18,887 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50,859,161 ஆன தொகை அல்லது 22.17 சதவீதம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம், முதலாவது இடைக்கால கொடுப்பனவிலிருந்து 36 மாதங்களிற்குள் இடைக்கால கொடுப்பனவு சான்றிதல்களிலிருந்து (IPC) ஆரம்ப கொடுப்பனவு மற்றும் முற்பணக் கொடுப்பனவு என்பன அறவிடப்பட், வேண்டிய போதிலும் ஆரம்ப கொடுப்பனவு மற்றும் முற்பணக் கொடுப்பனவு என்பன முறையே ஐ.அ.டொலர் 10,313,661 மற்றும் ஐ.அ.டொலர் 3,802,889 ஆன தொகை தொடங்கியதிலிருந்து 53 மாதங்கள் கடந்த பின்னரும் மெதுவான முன்னேற்றம் காரணமாக அறவிட முடியாதிருந்தது. ஆகவே, சபையானது செயற்திட்டம் அதன் நோக்கங்களை அடைவதற்கு செயற்திட்ட நிதிகளை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு வழிகாட்டலின் 2.5.1 (அ) ஆம் பிரிவின் வேண்டுகை பிரகாரம், சகல நீர் வழங்கல் செயற்திட்டங்களும் ஆரம்பத்தில் நிதிகளின் கிடைப்பனவை கொள்வனவு குழுவின் உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகவே, சகல நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்தில் ரூபா 136,202 மில்லியன் முதல் ரூபா 27,656 மில்லியன் வரை வரையறுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நிறைவேற்றலிற்காக 2021 ஆம் ஆண்டில் அந்த ஒதுக்கீட்டில் ரூபா 7,586 மில்லியன் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. இதன்படி, சபையானது திட்டமிட்டவாறு செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு இயலாதிருந்ததுடன் திட்டமிடப்பட்ட 2,817 செயற்திட்ட நடவடிக்கைகளில் 964 நடவடிக்கைகளின் முன்னேற்றம் 2022 செப்தெம்பர் 24 இல் உள்ளவாறு 6 சதவீதம் அல்லது 6 சதவீதத்திற்கு குறைவாகவே அடையப்பட்டிருந்தது. மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த செயற்திட்டங்களிற்காக இறக்குமதி செய்யப்பட்ட HDPE குழாய்களின் ரூபா 3,540,605,851 பெறுமதியான தொகை நாடுமுழுவதுமான முறையற்ற முகாமைத்துவம் காரணமாக பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது.

(உ) நில்வல ஆற்றிற்காக செய்யப்பட்ட புதிய உப்புநீர் தடையின் திட்டமிடல் கட்டத்தில் இனங்காணப்பட்ட வெள்ள அழிவு காரணமாக பயிற்செய்கைக்கு செய்யப்பட்ட அழிவுகளிற்காக விவசாயிகளிற்கு முன் காப்பீடாக ரூபா 7,921,891 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், புதிய கால்வாயை விருத்தி செய்வதற்காகவும் தடை காரணமாக எழுந்த பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு நீர் இறைத்தலிற்கு தேவைப்பட்ட எரிபொருளிற்காகவும் செலுத்துவதற்கு ரூபா 11,075,000 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதி இயலளவு போதாமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் நிராகரிக்கப்பட்டிருந்த ஒப்பந்தகாரருக்கு (SUP&MM/CHEM/ALUM-1/2021/02) ஐ.அ.டொலர் 765,000 மற்றும் ரூபா 9.9 மில்லியன் பெறுமதியான 3000 தொன் அலுமினியம் தகடு வழங்கி கையளிப்பதற்கான ஒப்பந்தத்தை கொள்வனவு குழுவானது வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், சபையானது பொருட்களை வழங்குவதற்கு தவறியமையால் ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணங்களை கோராமல் ஒப்பந்தத்தை நிறுத்தியிருந்தது.

(எ) சபையானது பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து ஏழு ஆண்டுகளிற்கு மேல் கடந்திருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு ரூபா 20,825 மில்லியன் செயற்திட்ட கிரயமாகவிருந்த அம்பாறை நீர் வழங்கல் செயற்திட்டத்தை (கட்டம் III) பூர்த்தியாக்குவதற்கு தறியிருந்தது. மேலும், ரூபா 30,351,710 செலவழித்து ஆறு பகுதியளவு நிர்மாணிக்கப்பட் நீர் கோபுரங்கள் மற்றும் ரூபா 15,790,210 பெறுமதியான DI குழாய்கள் மற்றும் பொருத்திகள் உப்பந்த நிறுத்தல் காரணமாக பயனற்றிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் இறுதி வரையும் அந்த ஆறு கோபுரங்களை பூர்ததியாக்குவதற்கு இன்னொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தமன்ன, இறக்காமம், சகம்ம மற்றும் மன்டான நீர் வழங்கல் திட்டங்களில் ரூபா 33,148,739 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பதின்மூன்று (13) உத்தியோகபூர்வ விடுதிகள் மீளாய்வாண்டு இறுதியில் பயனற்றிருந்தது.

(ஐ) ரூபா 5,585,337 மற்றும் ரூபா 9,157,499 பெறுமதியான முறையே இங்கிரிய, வதினகல மற்றும் தமன்ன நீர் வழங்கல் திட்டம் தொடர்பிலான சகல நிர்மாணங்களும் மீளாய்வாண்டு இறுதியில் பயனற்றிருந்ததுடன் அந்த சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2017 யூலை 03 இல் பொத்துவில் பகுதியில் அப்பகுதி அலுவலகத்தில் ரூபா 10 மில்லியன் பெறுமதியான வூவில் கமரா முறைமை இருந்ததுடன் அக்கரைப்பற்று முகாமையாளர் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் இறுதிவரையும் திருத்தப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கரைபற்று முகாமையாளர் அலுவலகத்தின் பௌதீக மெய்மையாய்வில் வெளிப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மூன்று தீவுகளில் மக்களிற்கான குடிதண்ணீர் வழங்குவதற்கு ரூபா 185,452,350 கிரயத்தில் நம்பகமான மின்சார வழங்கல் ஆதரவு முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கடல் நீர் சுத்திகரிப்பு பொறியில் நாள் ஒன்றிற்கு உற்பத்தி செய்ய வேண்டிய 150 கமீ இயலளவில் 70 கமீ நீர் உற்பத்தி மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட 1,652 நீர் இணைப்புகளில் 204 இணைப்புகளில் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் செயற்திட்ட பூர்த்தியாக்கல் 2 ஆண்டுகள் கடந்த பின்னரும் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடையப்பட்டிருக்கவில்லை.

3. ஏனைய கணக்காய்வு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெரிய மட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் மீள்கட்டமைப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பில் 2022 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 22/1286/604/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் பிரதம மந்திரி செயலாளரால் வழங்கப்பட்ட 2022.10.28 ஆந் திகதிய PMO/DEV II/2/2/1 ஆம் இலக்க கடிதம் என்பவற்றின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ஏழு செயற்திட்டங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டியிருந்த பன்னிரண்டு செயற்திட்டங்கள் இன்னமும் இடைநிறுத்தல் செயற்பாட்டில் உள்ளன. மேலும், குழுவானது 2023 ஆம் ஆண்டிற்குள் பத்து செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு சிபார்சு செய்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் இரண்டு செயற்திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த செயற்திட்டங்களிற்காக கவனத்தில் கொள்ளவேண்டிய தொகையை செவழித்த போதிலும் அந்த செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் அடைய முடியாதிருந்தது.

(ஆ) ரூபா 2,991.25 மில்லியன் கூட்டுதொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர், துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. புதிய இணைப்பு கடன்பட்டோரில் 3 தவணைகளில் அறவிட வேண்டிய போதிலும் புதிய இணைப்பு கடன்பட்டோரில் ரூபா 5,658,157 ஆன தொகை 3 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. புதிய இணைப்பு கடன்பட்டோரில் இருந்த ரூபா 15,569,200 ஆன அசாதாரண செலவு மீதி புலனாய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட மீதிகளில் கூட்டு ஆதன குடியிருப்பு சார்பில் ரூபா 5,666,581 ஆன நிலுவையாகவிருக்கின்ற மீதியுடன் 10/2/806/508/19 ஆம் இலக்க இணைப்போன்று தகுந்த காரணம் இல்லமால் இலவச நீர் வகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) அமைச்சு விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 11 நீர் இணைப்புகள் தொடர்பில் ரூபா 4,555,164 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்படாமல் நீண்ட காலம் நிலுவையாக இருந்தது.

(ஈ) 19 ஆண்டுகள் காலி நகர சபையின் இரண்டு சட்டவிரோத இணைப்புகள் தொடர்பில் ரூபா 1,765,352 ஆன நிலுவையாகவிருக்கின்ற மீதி மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்த கொழும்பு மாநகர சபை தொடர்பான ரூபா 28,519,949 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் நுகர்வோர் கருத்துரைப் பிரகாரம், புதிய இணைப்பு வழங்கிய திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் வாடிக்கையாளருக்கு முதலாவது பட்டியல் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 61 நாட்களிலிருந்து 163 நாட்கள் வரையான கருத்திற்கொள்ளவேண்டிய தாமதம் 2023 பெப்ரவரி 09 இல் உள்ளவாறு 162 சந்தர்ப்பங்களில் மேல் மாகாணத்தில் நான்கு பிராந்தியத்தில் 1 ஆவது பட்டில் வழங்குவது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,177,322,071 தொகையான வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் தீர்ப்பனவு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருந்தது.

(எ) ரூபா 163,809,973 தொகையான காணி சுவீகரிப்பு வைப்புகள் புலனாய்வு செய்து அவற்றினை அறவிட நடவடிக்கை எடுக்காமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. அதில், ரூபா 43,515,989 ஆன தொகை இனங்கண்டு அறவிடப்படாமல் 2016 இலிருந்து இருந்தது. மேலும், 03 கைவிடப்பட்ட காணிகளிற்காக செலுத்தப்பட்ட ரூபா 173,365 தொகையான வைப்புகள் 2018 ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்படாமல் கணக்கேடுகளிலிருந்து வைப்புகளாக இன்னமும் உள்ளது. ரூபா 5,041,738 ஆக கடன் தொகை நீண்ட காலமாக தெளிவுபடுத்தப்படாமல் வைப்புக்கணக்கில் உள்ளது.

(ஏ) ரூபா 17,535,788 தொகையான செயற்பாடற்ற முன்னாள் ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணங்கள் 2022 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமல் எட்டு ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு மாதிரி செவ்வை பிரகாரம், கடன்கள் மற்றும் முற்பணங்கள் பெற்றிருந்த மேற்குறித்த ஓய்வில் சென்றிருந்த ஊழியர்களின் 90 சதவீதத்திற்கு மேலான பெறவெண்டிய தொகைகளை அறவிடாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) 242/0 ஆம் இலக்க பேரேட்டு தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 242,002,232 ஆன ஒப்பந்த முற்பணத்தில் ரூபா 98,122,773 ஆன தொகை தீர்ப்பனவு செய்யப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக இருக்கின்றன. அவற்றில் ரூபா 8,176,092 ஆன தொகை பதிவு இல்லாமையால் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிட முடியாதிருந்தது. அந்த முற்பணங்களின் அறவீட்டுத்தன்மையை இனங்காண்பதற்கு ரூபா 9,805,216 பெறுமதியான முற்பணங்களிற்காக தொடரப்பட்ட ஆறு சட்ட வழக்குகள் பற்றி கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்கவில்லை.

(ஒ) வெளிதரப் நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 52,232,693 கூட்டுத் தொகையான மீளளிக்க வேண்டிய குறுகிய கால வைப்புகள் மூன்று ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் இருந்ததுடன் அவற்றில் ரூபா 11,953,200 உரிய ஆவணங்கள்

கிடைக்காமையால் அறவிட முடியாதிருந்தது. மேலும், அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 4,378,829 தொகையான முற்பணங்கள் ஒன்பது ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் இருந்தது.

(ஒ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைப்போக்கிலுள்ள இருப்பு (உள்நாட்டு கொள்வனவு) மற்றும் இடைப்போக்கிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட இருப்புகள் முறையே ரூபா 422,041,459 மற்றும் ரூபா 5,697,583,838 ஆக இருந்தது. அந்த இருப்புகளில் ரூபா 47,511,660 தோகையான உள்நாட்டு கொள்வனவு தெளிவுபடுத்தப்படாமல் மூன்று மாதங்களிற்கு மேலாக இருந்ததுடன் ரூபா 1,980,996,303 தொகையான இடைப்போக்கிலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட இருப்புகள் தெளிவுபடுத்தப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(ஔ) 2020– 2025 இற்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் "சகலருக்குமான நீர்" கொள்கையுடன் ஆண்டிற்காக 327,685 புதிய இணைப்பு இலக்கொன்று உருவாக்கப்பட்டதுடன் இறுதயாக இலக்கு ஆண்டின் போது 190,000 இற்கு திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் போது 153,217 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டது. மேலும், மீட்டர் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது புதிய இணைப்புகள் 20.24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 28.80 சதவீதத்தால்அதிகரித்திருந்தது. விற்பனை வருமானங்களிற்கான பிரதான காரணம் 2022 செப்தெம்பர் 01 இல் நீர் கட்டணங்கள் அதிகரித்திருந்தமையே ஆகும்.

(க) ஐந்து களஞ்சியங்களில் ரூபா 51,250,416 தொகையான இருப்பு பெறுமதிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருளிருப்பு முகாமைத்தவ முறைமைக்கு பதியப்பட்டிருக்கவில்லை.

(கா) பழுதடைந்த, பயன்படுத்தப்படாத மற்றும் நகராதவற்றில் முறையே ரூபா 4,030,131, ரூபா 210,294,082 மற்றும் ரூபா 647,357,338 கூட்டுத் தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைதவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் இருப்பு சேகரித்த காலப்பகுதியை இனங்காண்பதற்கு சபையால் காலப்பகுப்பாய்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(கி) ஏழு (07) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலைகளன் கீழ் காட்டப்பட்ட ரூபா 198,729,791 கூட்டுத் தொகை காரணங்களை இனங்காண்பதற்கு புலனாய்வு செய்யவதற்கும் முன்னைய ஆண்டுகளிலிருந்து இந்த விடயம் மீள உரைக்கப்பட்ட பொதிலும் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்கள் செய்வதற்கும் பன்னிரண்டு ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தது.

(கீ) சப்ரகமுவ பிராந்திய ஆதார நிலையத்தில் இடைநிறுத்தப்பட்ட ஐந்து செயற்திட்டங்களின் ரூபா 9,995,969 ஆன தொகை எவ்வித பூர்த்தியாக்கல் நடவடிக்கையும் இல்லாமல் பயனற்றிருந்தது.

(கு) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 49,846,688 தொகை முதலீட்டு தீர்மானத்தை பெற்றுக்கொள்ளாமல் 2000934 ஆம் இலக்க சேமிப்பு கணக்கில் இருந்ததுடன் கணக்கில் ஒவ்வொரு மாத்தின் சராசரி மாதத்திலும் ரூபா 33 மில்லியன் உள்ளதுடன் சபைத்தீர்மானம் முதலீட்டு மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசுடமைாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் பந்தி 6.2 இன் பிரகாரம் சபை சருமானம் ரூபா 35 பில்லியனை விஞ்சியிருந்த போதிலும் முதலீட்டு குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், எவ்வித நகர்வு மற்றும் முதலீட்டு தீர்மானமும் இல்லாமல் நீண்ட காலமாக காலத்திற்கு காலம் இன்னொரு சேமிப்பு கணக்கில் (க.இல. 2002283) ரூபா 1,500,082.86 ஆன தொகை இருந்தது.

(கூ) சபையின் கீழ் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 228 வாகனங்களின் எண்ணிக்கை சபையால் பேணப்பட்டிருந்த வாகன தரவுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) கடன்பட்டோருக்கு அனுப்பப்பட்ட உறுப்படுத்தலை பகுப்பாய்வு செய்யும் போது ரூபா 292,061,739 கூட்டுத் தொகையான 150 கணக்குகளில் ரூபா 135,262,006 கூட்டுத் தொகையான 53 கணக்குகள் 2023 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 66,201,380 கூட்டுத் தொகையான 17 கணக்குகள் இடங்களை கண்டுபிடிக்க இயலாமையால் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் ரூபா 35,798,188 கூட்டுத் தொகையான சபையின் மீதிகளுடன் உடன்படாதிருந்தது.

டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

சுருக்க வடிவங்கள்

AC -அஸ்பெஸ்டர் சீமெந்து / கணக்காய்வு குழு
ACMA -இணைந்த பட்டய முகாமைத்துவ கணக்காளர்
ACS -அவுஸ்திரேலியா கணினி சபை
ADB -ஆசிய அபிவிருத்தி வங்கி
ADRA -அட்வன்டிஸ்ட் அபிவிருத்தி மற்றும் நிவாரண முகவராண்மை
AE -பிரதேச பொறியியலாளர்
AFD -பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை
AGM -உதவி பொது முகாமையாளர்
AIWSP -ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம்
AWSSIP -அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்
BMICH -பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
BOC -இலங்கை வங்கி
BOQ -அளவீட்டு பட்டியல்
BOI -முதலீட்டுச் சபை
CBO -சமுதாய அடிப்படையிலான அமைப்பு
CCN -கொழும்பு நகரம் வடக்கு
CCS -கொழும்பு நகரம் தெற்கு
CCTV -மூடப்பட்ட சுற்றுலா தொலைக்காட்சி
CE -பிரதம பொறியியலாளர்
CEE -பிரதான பொறியியலாளர்கள்
CEA -மத்திய சுற்றாடல் அதிகாரசபை
CEB -இலங்கை மின்சார சபை
CEDE -இயலளவு மேம்பாட்டு மற்றும் விநியோக விரிவாக்கம்
CEO -பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
CETRAC -நிர்மாண உபகரண பயிற்சி நிலையம்
CIA -பிரதம உள்ளக கணக்காய்வாளர்
CIMA -பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம்
CHPB -வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டிடத்திற்கான நிலையம்
CI -உருக்கு இரும்பு
CIPM -ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனம்
CKDu -நோய்க் காரணி கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்
CMC -கொழும்பு மாநகர சபை
CP -கூட்டிணைந்த திட்டம்
CRIP -காலநிலை மாற்ற முன்னேற்ற செயற்திட்டம்
CRIWMP -காலநிலை எழுச்சி ஒருங்கிணைந்த முகாமைத்துவ செயற்திட்டம்
CS -கூட்டிணைந்த சேவைகள்
cu.m -கன மீற்றர்
DAB -பிணக்கு தீர்ப்புச் சபை
DC -நன்கொடை ஒருங்கிணைப்பு
DEWATS - பன்முகப்படுத்திய கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை
DGM -பிரதி பொது முகாமையாளர்
DI -முலாம் பூசப்பட்ட இரும்பு
DMA -மாவட்ட மானியிடல் பிரதேசம்
DoNCWS -தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்
DS -மாவட்ட செயலகம்
DSC -வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு ஆலோசனை
DSD -பிரதேச செயலக பிரிவு
DZUWSP -உலர் வலய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுச் செயற்திட்டம்
EIA -சுற்றாடல் தாக்க மதிப்பீடு
EPZ -ஏற்றுமதி செயற்படுத்தல் வலயம்
EWSP -எட்டம்பிட்டிய நீர் வழங்கல் செயற்திட்டம்
GCWWMIIP- கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
GIS -புவியியல் தகவல் முறைமை
GKWRC -குருநாகல் பெரும்பாக நீர் மீட்டெடுப்பு நிலையம்
GM -பொது முகாமையாளர்
GMWSP -மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்
GN -கிராம சேவகர்
GND -கிராம சேவகர் பிரிவு
GoSL -இலங்கை அரசாங்கம்
GPOBA -வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GR -நிலக்கீழ் நீர்த் தேக்கம்
HDPE -உயர்ந்த அடர்த்தியான பொலி எத்திலீன்
HRM -மனித வள முகாமைத்துவம்
IA -உள்ளக கணக்காய்வு
IEC -சர்வதேச மின்னியல் தொழல்நுட்ப ஆணைக்குழு
IR -கைத்தொழில் உறவுகள்
ICT -தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பம்
ICTAD -நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
IWA -சர்வதேச நீர் மன்றம்
IWSP -ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம்
IEE -ஆரம்ப சுற்றுச்சூழல் பரிசோதனை
IESL -இலங்கை பொறியியல் நிறுவகம்
IMS -பொருட் பட்டியல் முகாமைத்துவ முறைமை
IoT -இணையதள சாதனம்
ISO -நியமப்படுத்தலிற்கான சர்வதேச அமைப்பு
IT -தகவல் தொழில்நுட்பம்
ITEC -இந்தியன் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டமைப்பு
IPVPN -இணைய நெறிமுறை மெய்மைப்பாடு பிரத்தியேக வலையமைப்பு
JICA -ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JP -சமாதான நீதவான்
JPY -ஜப்பான் யென்
KCWMP -கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம்
Km -கிலோ மீட்டர்
KRB -களனி வலது கரை
LBF -உள்நாட்டு வங்கி நிதி
LKR -இலங்கை ரூபா
M&E -இயந்திரவியல் மற்றும் மின்னியல்
MBA -வியாபார நிர்வாக முதுகலைமாணி
MD&T -மனித வலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி
MIS -முகாமைத்துவ தகவல் முறைமை
MoU -புரிந்துணர்வு ஒப்பந்தம்
MSC -விஞ்ஞான முதுகலைமானி
MMDC -மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
MG -மெகா வாட்ஸ்
NAITA -தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
NBRO -தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனம்
NC -வடக்கு மத்திய
NCP -வட மத்திய மாகாணம்
NDB -தேசிய அபிவிருத்த வங்கி
NDT -தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NGOs -அரச சார்பற்ற அமைப்புகள்
NHDA -தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
NIBM -தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம்
NPD -தேசிய திட்டமிடல் திணைக்களம்
NRW -வருமானமற்ற நீர்
NWSDB -தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
O&M -செயற்பாடு மற்றும் பராமரிப்பு
OIC -நிலையப் பொறுப்பதிகாரி
PAM -பொலியக்கிரமிட்ஸ்
PE -பொலி எத்தீன்
PVC -Polyvinyl chloride
(PVT) Ltd -வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
P&D -திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு
P&P -கொள்கை மற்றும் திட்டமிடல்
PAC -செயற்திட்ட நெறிப்படுத்தல் குழு
PDMRC -திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழு
PMU -செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு
PRDA -மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
PTB -பிசிக்காலிச் உத்தி பவுண்டேசன்டல்
PWD -பொது வேலைகள் திணைக்களம்
R&D -ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
RAC -ஆராய்ச்சி அனுமதி குழு
RC -ஆபத்துக் குழு
RDA -வீதி அபிவிருத்தி அதிகாரசபை
RDB -கிராமிய அபிவிருத்தி வங்கி
RFP -முன்மொழிவுக்கான வேண்டுகோள்
RIDEP -கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்
RM -பிராந்திய முகாமையாளர்
RO -உவர்ப்பு பிரித்தெடுப்பு
RSC - பிராந்திய ஆதார நிலையம்
WN - பிராந்திய ஆதார நிலையம் (மேல் வடக்கு)
WS -பிராந்திய ஆதார நிலையம் (மேல் தெற்கு)
N -பிராந்திய ஆதார நிலையம் (வடக்கு)
NW -பிராந்திய ஆதார நிலையம் (வட மேல்)
RWS -கிராமிய நீர் வழங்கல்
SBD -நியம கேள்வி ஆவணங்கள்
SCADA -மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு சேகரிப்பு
SCAPC -நிலையான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள பெருமைக் குழு
SDG -நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
SEP -துப்புரவேற்பாட்டு மேம்பாட்டு செயற்திட்டம்
SHIFT -நகரங்களிற்கான துப்புரவேற்பாடு மற்றும் தூய்மை கட்டுப்பாடு
SIDA -சுவீடன் சர்வதேச அபிவிருத்தி
SL -இலங்கை
SLAS -இலங்கை நிர்வாக சேவை

SLIDA	-இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்
SLSI	-இலங்கை தரக் கட்டளை நிறுவனம்
SOEs	-அரச உடமை தொழில் முயற்சிகள்
SMS	-குறுகிய செய்தி சேவை
ST	-சிறிய நகரம்
STP	-சாக்கடை சுத்திகரிப்புத் தொகுதி
TA	-தொழில்நுட்ப உதவி
TCE	-மொத்த மதிப்பீட்டுச் செலவு
THM	-Tihalomethane
ToR	-நிபந்தனை குறிப்புரைகள்
ToT	-பயற்சியாளர்களின் பயிற்சி
UDA	-நகர அபிவிருத்தி அதிகாரசபை
UK	-ஐக்கிய இராச்சியம்
UNDP	-ஐக்கிய நபடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
UNICEF	-ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர்களின் அவசர நிதியம்
UPVC	-பிளாஸ்ரிக் இடப்படாத பொலிவினல் குளோரைட்டு
USD	-ஐக்கிய அமெரிக்க டொலர்
VPN	-விரைவான தனியார் வலையமைப்பு
VPP	-வவுனியா பங்குபற்றல் திட்டமிடல்
VAT	-பெறுமதிசேர் வரி
WaSSIP	-நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுச் செயற்திட்டம்
WDCE	-நீர் மற்றும் அபிவிருத்தி கருத்தரங்கு மற்றும் கண்காட்சி
WHO	-உலக சுகாதார அமைப்பு
WSP	-நீர் வழங்கல் செயற்திட்டம் /நீர் பாதுகாப்பு திட்டம்
WSS	-நீர் வழங்கல் திட்டம்
WTP	-நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதி
WWDS	-கழிவுநீர் அகற்றல் முறைமை
WWTP	-கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதி

ප්‍රධාන කාර්යාලය

ජා.ජ.හා.ජ. මණ්ඩලය
ගාලු පාර
රත්මලාන
ශ්‍රී ලංකාව

+94 11 2638999
+94 11 2611589

gmnwsdb@gmail.com

தலைமை அலுவலகம்

தே.நீ.வ.வ.ச.
காலி வீதி
இரத்மலானை
இலங்கை

+94 11 2638999
+94 11 2611589

gmnwsdb@gmail.com

Head Office

NWSDB
Galle Road
Ratmalana
Sri Lanka

+94 11 2638999
+94 11 2611589

gmnwsdb@gmail.com

Printed by ANCL Printing Dept.